819

# வக்கீல்

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 NOV 1955
MADRAS

819
4-55

1955
இதழ் 5
(நவம்பர்)

பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட விஷயங்களையும் எளிய தமிழ் நடையில் விளக்கும் மாத வெளியீடு.

**இந்த இதழில்**

**சென்னை சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டம்**

விலை அணா 4.

(All Rights Reserved.)




**THE VAKIL ✱ TAMIL LAW MAGAZINE**

## "வக்கீல்"

பொது மக்களுக்கான

உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

குறிப்பு: "வக்கீல்" பத்திரிகை 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. மாதம் ஒருமுறை பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. "வக்கீல்" பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய விதிகளையும் எளிய தமிழில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை. வழக்கும்—தீர்ப்பும்; கேள்வி—பதில்; வரிகள்; தொழிலாளர் பகுதி போன்ற பல அம்சங்கள் உண்டு.

### ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B.A., B.L.,
,, V. தியாகராஜன், B.A., B.L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
,, S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
,, T. S. வெங்கடராமன், B.A., B.L.,
,, R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
,, R. கோபாலசாமி, B.A., B.L.,
,, C. R. வீரராகவன், M.A., B.L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
,, P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B.A., B.L.,
[ ஆசிரியர் ]

## "வக்கீல்" சந்தா விபரம்

தனிப்பிரதி அணா 4. வருட சந்தா ரூ. 3. ஷை வெளி நாடு இலங்கை உள்பட ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதார்கள் கவனிக்கவும்:—வருடச் சந்தாதார்களுக்கு 12 இதழ்கள் அனுப்பப்படும். "வக்கீல்" பிரசுரங்கள் என்ற தனிச் சட்டப் புத்தகங்களை வருடச் சந்தாதார்கள் சலுகை விலையில், அதாவது அதனதன் விலையில் ரூ. 1க்கு அணா 4 தள்ளி, பெற்றுக்கொள்ளலாம். ஆயுள் சந்தாதார்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும். சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-

மானேஜர் " வக்கீல் " காரியாலயம்

தபால் பெட்டி 26, கும்பகோணம்

(தென் இந்தியா)

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

## "வக்கீல்" அறிவிப்பு

"வக்கீல்" பத்திரிகை இனி முன் போலவே ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலும் பிரசுரம் செய்யப்படும். புதிய சட்டங்கள் நமது பார்லிமெண்ட் சபையிலும், சட்டசபைகளிலும் "பாஸ்" ஆகிவிட்டாலும் அவைகளுக்கு ஜனாதிபதி அவர்களோ, கவர்னர் அவர்களோ சம்மதம் அளித்த பிறகுதான் அவை சட்டங்களாகும். பிறகு தான் அரசாங்க கெஜட்டில் அவைகள் பிரசுரம் செய்யப்பட்டு அமுலுக்கு வரும்.

பார்லிமெண்ட் அல்லது சட்டசபைகளால் அங்கீகரிக்கப்பட்ட சில முக்கிய சட்டங்களுக்கு ஜனாதிபதி அவர்களோ கவர்னர் அவர்களோ உடனடியாகச் சம்மதம் கொடுத்துவிடக்கூடுமென்ற எண்ணத்தில் 1955-ம் வருட ஆரம்பம் முதல் நமது "வக்கீல்" பத்திரிகையின் பிரசுரத் தேதியை சில முக்கிய சட்டங்கள் வருவதற்கு ஒத்தபடி மாற்றி பிரசுரம் செய்துவந்தோம். இந்த ஏற்பாடு சரியாக வரவில்லை. ஏனென்றால் சில முக்கியச் சட்டங்களுக்கு ஜனாதிபதி அவர்களின் சம்மதம் மிகக் காலதாமதமாகவே அளிக்கப்பட்டு வருகின்றது. உதாரணமாக இந்த இதழில் பிரசுரமாகி இருக்கும் சென்னை சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டத்திற்கு ஜனாதிபதி அவர்களின் சம்மதம் மிகக் காலதாமதமாகவே கிடைத்தது. இரண்டு வாரங்கள் கடந்த பின்புதான் விதிகள் பிரசுரமாயின. இனி "வக்கீல்" பழைய ஏற்பாட்டின்படியே ஆங்கிலமாதம் முதல் தேதியில் பிரசுரம் செய்யப்பட்டு வரும்.

"வக்கீல்" 1955 இதழ் 4 ஜுலை — ஆகஸ்டு என்ற இதழுக்குப் பிறகு இந்த இதழ் 1955 இதழ் 5 — நவம்பர் என்று நவம்பர் முதல்தேதியில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்த இதழ் 1955 டிசம்பர் 1 தேதி சந்தாதார்கள் கையில் இருக்கும்.

வருட சந்தாதார்களுக்கு இதழ் 1 க்கு அணா 4 ஆகவே கணக்குச் செய்யப்பட்டு ரூ 3 கட்டியவர்களுக்கு 12 இதழ்கள் அனுப்பப்படும். இவ்விதம் கணக்குச் செய்யப்பட்ட சந்தாத் தொகை தீர்ந்தவுடன், புதிய சந்தா கட்டும்படி நேயர்களுக்கு வேண்டுகோள் அனுப்பப்பட்டு வருகிறது. சந்தா தீர்ந்துவிட்டால், புதிய சந்தா செலுத்தப்பட்ட பிறகுதான் பத்திரிகை அனுப்பப்படும் என்பதை அன்பர்கள் தயவு செய்து கவனிக்கவும். ஏன் பத்திரிகை வரவில்லை என்று கடிதம் எழுதும் நேயர்கள் சந்தா நம்பரைக் குறிப்பிடுவதுடன், சந்தா இருக்கிறதா என்பதையும் கவனித்துக் கடிதம் எழுதவும்.

வெண்சங்கு நறுமண சீயக்காய்த் தூள்

குணம்
மணம்
சுத்தம்
ஆரோக்கியம்
சிக்கனம்
உடையது.

நறுமண சீயக்காய்த்தூள்
REGD. No. 13817.

உரிமை:
S. பெத்தண்ண நாடார்
.. கீழவாசல்–தஞ்சாவூர்..

ஆடைகளை அழகு பெறச் செய்வது
★ அன்னகிளி ★
சோப்
— தயாரிப்பவர் —
சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 22 :: தஞ்சாவூர்.

Guarented and High class
Lace Silk Sarees
For Variety and Moderate Price
**MARUTHI VILAS**
Ariya: *M. Ramasamy Ayyar*
PURE SILK JAVILI MERCHANT
SALAI STREET, AYYAMPET
TANJORE DISTRICT

"வக்கீல்"

# பொருள் அடக்கம்

மலர் 7 November 1955 இதழ் 5

குறிப்புகள்

புதிய தமிழ் நாடு 4

"தமிழ் நாடு" என்ற பெயர்வை 4

"தமிழ் நாட்டின்" தலைநகர் 4

விற்பனை வரிச் சட்டமும்
ராஜ்ய சர்க்கார்களும் 5

சென்னை சாகுபடிதார் (குத்தகைதார்)
பாதுகாப்புச் சட்டம் (1955) 6

சென்னை சாகுபடிதார்
பாதுகாப்புச் சட்ட விதிகள் 11

ஷை நமூனா I 11

ஷை நமூனா II, III 12

Madras Cultivating Tenants
Protection Act 1955 13

கேள்வியும் – பதிலும் 16

வழக்கும் – தீர்ப்பும்

விற்பனை வரி - சுப்ரீம் கோர்ட்
தீர்ப்பு 18

கூட்டுறவுச் சட்டமும் விதிகளும் 20

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
187741


# வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 7 நவம்பர் 1955 இதழ் 5


## புதிய தமிழ்நாடு

நாம் வெகு நாட்களாக ஆசைப்பட்டுக் கொண்டிருந்த தனித் தமிழ்நாடு உறுவாகிவிட்டது. நம்மை அமுக்கிக்கொண்டிருந்த ஆந்திரர்கள் பிரிந்துவிட்டனர். நம்மை அண்டிக்கொண்டிருந்த மலையாளர்களும் கன்னடர்களும் இன்னும் சில நாட்களுக்குள் நம்மை விட்டுப் பிரிந்து போவார்கள். தாயுடன் சேரத் தவித்துக் கொண்டிருக்கும் கன்னியாகுமரியும் தாயகம் வருகிறாள். இந்திய மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட ராஜ்யப் புனரமைப்புக் கமிஷனின் யாதாஸ்தின்படி இன்னும் சில நாட்களில் உருவாகும் மதராஸ் ராஜ்யமானது சுத்தக் கலப்பில்லாத தமிழ்நாடாகும்.

## "தமிழ்நாடு" என்று பெயர் வை

இனி நமது ராஜ்யத்திற்குத் "தமிழ்நாடு" என்று அதிகார பூர்வமாகப் பெயரை மாற்ற எவ்விதத் தடையுமில்லை. இந்தியாவில் இப்போதிருக்கும் இருபத்தி ஏழு ராஜ்யங்கள் இனி பதினாறு ராஜ்யங்களாக அமைக்கப்பட்டுவிடும். புதிய ராஜ்யங்கள் அனேகமாக மொழியை ஆதாரமாகக் கொண்டே அமைக்கப்பட்டிருக்கின்றன. "மதராஸ் ராஜ்யம்" என்பதை நமது அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே "தமிழ் நாடு" என்று மாற்ற முயற்சி எடுத்துக்கொள்ளுவது நமது மந்திரிகளின் கடமையாகும்.

## "தமிழ்நாட்டின்" தலைநகர்

தமிழ் நாட்டின் தலைநகர் எது என்பதைச் சுதந்தரத் தமிழ் மக்கள் கூடிய சீக்கிரமாக முடிவு செய்துவிட வேண்டும். புத்துயிர் பெற்ற தமிழ் நாட்டின் தலைநகர் தமிழகத்தின் நடுநாயகமாக இருப்பது மிகமிக அவசியமாகும். அரசாங்கத் தலைநகர் சென்னையாக இருப்பதைவிட மதுரைமாநகராக இருப்பதுதான் பொருந்தும். தேவையானால் ஹைகோர்ட்டைக் கோயமுத்தூர், அல்லது திருச்சி போன்ற பட்டணங்களிலும் வைத்துக் கொள்ளலாம். அல்லது ஹைகோர்ட் சென்னையிலிருந்துகொண்டே ஒரு பகுதி இப்பட்டினங்கள் எதிலாவது தென் ஜில்லா வழக்குகளை விசாரிக்கலாம். கன்னியாகுமரியிலிருக்கும் தமிழ் மக்கள் ஒவ்வொன்றுக்கும் சென்னை போய் வருவது என்பது முடியாத காரியம். சென்னைமாநகர் தமிழரால் ஆக்கப்பட்டிருந்தாலும் சுதந்தரத் தமிழகத்துக்குத் தலைநகர் என்று நாம் அதை அமைக்கவில்லை. ஆதியில் ஆங்கிலேயனை அண்டிப் பிழைக்க அங்கு சென்றவர்களால் அந்நிய ஆட்சியின் நிர்வாகத்திற்கொரு கேந்திர ஸ்தானமாக அமைக்கப்பட்ட சென்னைப் பட்டினமானது, எவ்வளவு அழகான பட்டினமாக இருந்தாலும், எவ்வளவு விலையுயர்ந்த கட்டடங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தாலும் தமிழகத்தின் உயிர்நாடிகள் கூடுமிடம் மதுரை மாநகரில்தான்.

## விற்பனை வரிச் சட்டமும் ராஜ்ய சர்க்கார்களும்

விற்பனை வரிச் சட்டத்திலும் சரி, விதிகளிலும் சரி எந்த ஷரத்துக்கள் செல்லும் எவை செல்லாது என்பது பெரிய பிரச்னையாகிவிட்டது. ஒரு ராஜ்யத்திலுள்ள வியாபாரியானவர் வேறு ராஜ்யத்திற்கு சரக்கு விற்று அனுப்பினால், சரக்கு அனுப்பப்பட்ட ராஜ்ய சர்க்காருக்கு, அவர் விற்பனை வரி கொடுக்க வேண்டுமென்று ஏற்கனவே நமது சுப்ரீம் கோர்ட்டார் ஒரு தீர்ப்பளித்தனர். அதை ஒட்டி எல்லா ராஜ்ய சர்க்கார்களும் வெளி ராஜ்ய வியாபாரிகளிடமிருந்து விற்பனை வரி வசூல் செய்து வருகின்றனர். இதற்காக சாங்கோபாங்கமான விதிகளும் நமூனாக்களும் ஏற்படுத்தி இருக்கின்றனர். ஆனால் சமீபத்தில் நமது சுப்ரீம் கோர்ட்டார் அளித்திருக்கும் தீர்ப்பிலிருந்து ராஜ்ய சர்க்கார்கள் வெளி ராஜ்ய வியாபாரிகளிடம் விற்பனை வரி வசூல் செய்தது சட்ட விரோதமென ஏற்படுகிறது. (இந்தத் தீர்ப்பின் விபரம் வழக்கும் — தீர்ப்பும் என்ற பகுதியில் பார்க்கவும்.) இனி ராஜ்ய சர்க்கார்கள் வெளி ராஜ்ய வியாபாரிகளிடம் விற்பனை வரி வசூல் செய்யாமலிருப்பதுடன் இதுவரை சட்ட விரோதமாக இவர்கள் வசூல் செய்த தொகைகளையும் வாபஸ் செய்யவேண்டியது அந்தந்த ராஜ்ய சாக்கார்களின் கடமையாகும்.


தரத்தில் உயர்ந்ததும்
சலவைக்கு மிகச் சிறந்ததும்
பெரும்பான்மையோர் விரும்பி
வாங்குவதும்




எப்பொழுதும் வாங்கி
உபயோகியுங்கள்.

—: தயாரிப்பு :—

M. K. சோப் ஒர்க்ஸ்

கும்பேஸ்வரர் தெற்குவீதி

கும்பகோணம்



அசல்

ஓம்பத்திவேலி பிரஸவ மருந்து

அசல் ஓம்பத்திவேலி பிரஸவமருந்தை வாங்கி கர்பிணிக்குக் கொடுத்து சௌபாக்கியத்தை அடைய விரும்புகிறோம். போலி மருந்துகளை வாங்கி ஏமாற வேண்டாம்.

அசல் பிரசவ மருந்து கிடைக்குமிடம் :—

ஓம்பத்திவேலி பிரஸவ மருந்து
காரியாலயம்.

*Director:* C. P. S. Aravamudan.

54. மேட்டுத் தெரு
கும்பகோணம் S. India

விலை விபரம் :—

10 தினங்களுக்கு 10 பவுடர்
ரூ. 2 8 0

ஷை 10 மாத்திரை ரூ. 3 8 0

வி. பி. சார்ஜ் வேறு

# சென்னை சாகுபடிதார் (குத்தகைதார்) பாதுகாப்புச் சட்டம் [1955]

[சென்னை ராஜ்ய சட்ட சபையால் இயற்றப்பட்ட 1955-ம் வருடத்திய 25-வது சென்னைச் சட்டம். Madras Cultivating Tenants Protection Act 1955. இச்சட்டம் 24—9—1955-ல் இந்திய ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்று 27—9—1955 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட் விசேஷ வெளியீட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. கெஜட்டில் முதலில் பிரசுரம் செய்யப்பட்ட தேதியாகிய 27—9—1955 முதல் இச்சட்டம் அமுலுக்கு வந்து விட்டது. தமிழ் நாட்டில், 1952-ம் வருடத்திய தஞ்சாவூர் சாகுபடிதார்—பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் அமுலில் இருக்கும் இடங்களுக்கு இச்சட்டம் கிடையாது. அதாவது பூரா தஞ்சாவூர் ஜில்லாவுக்கும், சிதம்பரம் தாலூக்காவிலும் கடலூர் தாலூக்காவிலும் எந்த எந்த பிர்க்காக்களுக்கும் கிராமங்களுக்கும் தஞ்சைச் சட்டம் விஸ்தாரிக்கப்பட் டிருக்கிறதோ அந்த இடங்களுக்கும் இச்சட்டம் கிடையாது என்பதை கவனிக்கவும்.

கீழே இருப்பது இச்சட்டத்தின் விளக்கமே ஒழிய மொழி பெயர்ப்பு அல்ல. சந்தேகங்கள் தோன்றுமிடங்களில் ஆங்கில வாசகங்களை வைத்துக்கொண்டு அர்த்தம் செய்ய வேண்டியிருப் பதால் இச் சட்டத்தின் ஆங்கில வாசகமும் அப்படியே இந்த இதழில் பிரசுரம் செய்யப்பட் டிருக்கிறது.]

### சட்டத்தின் பெயரும், அமுலில் உள்ள இடங்களும், அமுல் காலமும்.

சென்னை ராஜ்யத்தில் சில பிரதேசங்களில் சாகுபடி செய்யும் குத்தகைதார்களை நியாய மற்ற முறையில் வெளியேற்றப் படுவதைத் தடுப்பது அவசியமாக இருப்பதால், இச்சட்டம் இயற் றப்பட்டிருக்கிறது.

செக்ஷன் 1

(1) இச் சட்டத்திற்கு 1955-ம் வருடத்தியச் சென்னை சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டம் என்று பெயர். (2) இச்சட்டம் கீழே கண்ட இடங் கள் தவிர பாக்கியுள்ள சென்னை ராஜ்யம் பூரா விலும் அமுலில் இருக்கும். அதாவது (i) மலையாளம் ஜில்லா, தென்கன்னடம் ஜில்லா (ii) நீலகிரி ஜில்லாவில் கூடலூர் தாலூக்கா (iii) 1952-ம் வருடத்திய 14-வது சென்னைச் சட்டமாகிய தஞ்சாவூர் சாகுபடிதார்-பண்ணை யாள் பாதுகாப்புச் சட்டம் அமுலில் இருக்கும் இடங்கள் - இவை தவிர சென்னை ராஜ்யத்தில் உள்ள மற்ற எல்லா இடங்களுக்கும் இச் சட்டம் உண்டு. (3) இச்சட்டம் ஒரு வருடத் திற்கு அமுலில் இருக்கும்.

### சொற்களின் பொருள்

இச் சட்டத்தில் சந்தர்ப்பத்தைப் பொறுத்து வேறு விதமாக அர்த்தம் செய்யும்படி இருந்தா லொழிய, கீழே கண்ட சொற் களின் பொருள் பின் வருமாறு:

செக்ஷன் 2

(a) "சாகுபடிதார்" அல்லது "சாகுபடி செய்யும் குத்தகைதார்" ("Cultivating tenant") என்றால் — வேறு ஒருவருடைய நிலங்களைச் சாகுபடி அல்லது குத்தகைக்கு, வியக்தமாகவோ வேறு விதமாகவோ ஏற்பாடு செய்துகொண்டு, அந் நிலங்களைத் தம்முடைய சொந்த உழைப்பைக் கொண்டோ, அல்லது தம்முடைய குடும்பத் தினருடைய உழைப்பைக் கொண்டோ, அல் லது தம்முடைய மேற்பார்வையில் தம்முடைய கட்டுப்பாட்டுக்குட்பட்ட கூலியாட்களின் உழைப்பைக் கொண்டோ சாகுபடி செய்யும் நபரைக் குறிக்கும். குத்தகை ஏற்பாட்டின்படிக் குள்ள கெடுவுக்குப் பிறகும் குத்தகை நிலங்களைத் தொடர்ந்து தம்முடைய சுவாதீனத்தில் வைத் திருப்பவரும் இச் சட்டப்படி "சாகுபடிதார்" ஆவார். சாகுபடிதார்களுடைய வார்சுகளும் "சாகுபடிதார்" களே யாவார்கள். (b) "சாகுபடி" (Cultivation) என்பது நிலங்களை விவசாயம் அல்லது தோட்டப்பயிர் செய்யும் பொருட்டு உபயோகப் படுத்துவதைக் குறிக்கும். (c) "சாகுபடி நிலம்" (Hold -ing) என்பது சாகுபடிதாரால் சாகுபடிக்காக வைத்துக்கொள்ளப் பட்டிருக்கும் நிலங்களைக் குறிக்கும்.

### 'நிலம்' என்பதில் 'மனைக்கட்டும்' சேர்ந்ததே.

(d) "நிலம்" (Land) என்பது— விவசாயம் அல்லது வோட்டப் பயிர் செய்யும் பொருட்டு உபயோகிக்கப்படும் நிலத்தையும், அதைச் சேர்ந்த கட்டடம், தரிசு நிலம், காலி நிலம் அல்லது காட்டு நிலம் இவற்றையும், நிலச்சுவான்தாருக்குச் சொந்தமானதும் அதே

சாகுப்டி அல்லது குத்தகை ஏற்பாட்டின்படி சாகுபடிதாருக்குக் குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் மனைக்கட்டையும் குறிக்கும்.

(e) 'நிலச்சுவான்தார்' அல்லது 'நிலத்தின் சொந்தக்காரர்'. (Land lord) என்பது சாகுபடிதாரை நிலத்தை விட்டு அகற்ற உரிமை உள்ள நபரைக் குறிக்கும்.

(f) 'ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர்' (Revenue Divisional Officer) என்ருல் பிரஸ்தாபக் குத்தகை அல்லது சாகுபடி நிலமோ, அதன் பாகமோ, எந்த இடத்தில் இருக்கிறதோ, அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள 'ரிவின்யூ டிவிஷனல் ஆபீசரை'க் குறிக்கும். அல்லது இதற்காக ராஜ்ய சர்க்காரால் நியமிக்கப்படும் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் அந்தஸ்துக்குக் குறையாத ஒரு ரிவின்யூ இலாகா அதிகாரியைக் குறிக்கும்.

## சாகுபடிதார் அல்லது குத்தகைதார்களை, நிலச்சுவான்தார்கள் வெளியேற்றக் கூடாது

அடுத்துவரும் ஷரத்துக்களுக்குட்பட்டு, இச்சட்டம் அமுலில் இருக்கும்வரையில் (அதாவது 27-9-1956 வரையில்)

**செக்ஷன் 3 (1)**

சாகுபடிதார் அல்லது குத்தகைதார் எவரையும் அவருடைய சாகுபடி நிலத்திலிருந்து நிலச்சுவான்தார் அகற்றக் கூடாது. நிலச்சுவான்தார் தாமேயோ, அல்லது தமக்காக வேறு ஒருவரைக் கொண்டோ, கோர்ட்டின் டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றியோ அல்லது வேறு விதமாகவோ மேற்கண்டபடி சாகுபடிதாரை அகற்றக் கூடாது.

## ஆனல் சில சாகுபடிதார்களுக்கு மேற்கண்ட பாதுகாப்பு கிடையாது. அவர்களை அகற்றத் தடை இல்லை.

(குத்தகைத் தொகையைக் கோர்ட்டில் கட்டுவது சம்பந்தமான) அடுத்து வரும் ஷரத்துக்குட்பட்டு மேலே செக்ஷன் 3 (1) ஷரத்தில் கண்ட பாதுகாப்பானது அடியிற்கண்ட சாகுபடிதார்களுக்குக் கிடையாது.

**செக்ஷன் 3 (2)**

அதாவது:- (a) 31-3-1954 தேதிக்குப் பிறகு நிலத்தின் சொந்தக்காரருக்குச் சாகுபடிதார் கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கி இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 27-9-1955ல் இருந்து, அதை இச்சட்டம் அமுலுக்கு வந்த ஒரு மாதத்திற்குள் (அதாவது 27-10-1955க்குள்) செலுத்தாத சாகுபடிதார்களுக்கும் சரி; இச்சட்டம் அமு



லுக்கு வந்த பிறகு சாகுபடிதார் கொடுக்க வேண்டிய குத்தகைத் தொகைகளை அவை கொடுக்கப்படவேண்டிய கெடுவிலிருந்து ஒரு மாதத்திற்குள் செலுத்தாத சாகுபடிதார்களுக்கும் சரி (b) நிலத்திற்கோ, அதிலுள்ள பயிருக்கோ அழிவு அல்லது கெடுதி விளைவிக்கக்கூடிய வகையில் காரியத்தைச் செய்யும் அல்லது அசட்டையாக இருக்கும் சாகுபடிதார்களுக்கும் சரி; நிலத்தில் சாகுபடி செய்வதை அடியோடு நிறுத்திவிட்ட சாகுபடிதார்களுக்கும் சரி; (c) விவசாயம் அல்லது தோட்டப் பயிர் வேலை இல்லாத வேறு காரியத்திற்காக நிலத்தை உபயோகப்படுத்தும் சாகுபடிதார்களுக்கும் சரி (d) நிலத்தின் சொந்தக்காரருக்குள்ள நில பாத்தியத்தை வேண்டுமென்றே மறுக்கும் சாகுபடிதார்களுக்கும் சரி-மேலே கண்ட பாதுகாப்புக் கிடையாது.

விளக்கம்:-உண்மையாக ஏற்பட்ட தவறுதலால் ஒரு சாகுபடிதாரானவர் நிலச்சுவான்தாருடைய பாத்தியத்தை மறுப்பதானது "வேண்டுமென்றே" மறுப்பதாகாது.

## குத்தகை பாக்கியை ஒரு மாதக் கெடுவுக்குள் கோர்ட்டில் கட்டலாம்

சாகுபடிதார் கொடுக்கவேண்டிய குத்தகைத் தொகையை, நிலச்சுவான்தாருக்குச் சேரும்படி கோர்ட்டில் கட்டிவிடலாம்.

**செக்ஷன் 3 (3) (a)**

சாகுபடிதார் கொடுக்கவேண்டிய குத்தகையானது தானியமாக இருந்தால், கோர்ட்டில் கட்டும் தேதியில் அத்தானியத்தின் காலக்கிரயம் எதுவோ அத்தொகையைக் கோர்ட்டில் கட்டிவிடலாம். 31—3—1954க்கு பிறகு சாகுபடிதார் கொடுக்கவேண்டிய குத்தகைத் தொகையை இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் (அதாவது 27—10—1955 க்குள்) கட்டிவிடவேண்டும். இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு சாகுபடிதார் கொடுக்கவேண்டியதாக ஏற்படும் குத்தகைத் தொகையை, அக்குத்தகை கொடுக்கப் படவேண்டிய கெடுத் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் கோர்ட்டில் கட்டிவிடவேண்டும்.

## கட்டிய தொகை சரியா என்பதைப் பற்றி விசாரணை

மேற்கண்டபடி சாகுபடிதார் குத்தகைத் தொகையைக் கோர்ட்டில் கட்டிய பிறகு, அவ்விஷயம் கோர்ட்டு நோட்டீஸ் மூலம் நிலத்தின் சொந்தக்காரருக்குத் தெரிவிக்கப்படும்.

**செக்ஷன் 3 (3) (b)**

சாகுபடிதார் கட்டிய தொகை சரி

யான தொகையா என்பதைப் பற்றிக் கோர்ட்டார் சுருக்கமாக விசாரணை நடத்தித் தீர்மானம் செய்யவேண்டும். இன்னும் சாகுபடிதார் பாக்கி கட்டவேண்டுமென்று கோர்ட்டார் தீர்மானம் செய்யும் பட்சத்தில், அப்பாக்கியைக் கட்டக் கோர்ட்டாருக்கு நியாயமாகவும் யுக்தமாகவும் தோன்றும் கெடுவுக்குள் கட்டிவிடும்படி உத்தரவு செய்யப்படும். பாக்கி குத்தகைத் தொகையுடன் கோர்ட்டார் நிர்ணயம் செய்யும் செலவு தொகையையும் சேர்த்துக் கட்டும்படி உத்தரவிட கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. நிலத்தின் சொந்தக்காரர், சாகுபடிதார் இருவருடைய சமய சந்தர்ப்பங்களையும் கவனித்து, மேற்கண்டபடி பாக்கித் தொகை கட்டக் கோர்ட்டால் கெடுக்கொடுக்கப்படும். சாகுபடிதார் மேற்கொண்டு யாதொரு தொகையும் கட்டவேண்டியதில்லை என்று கோர்ட்டார் தீர்மானம் செய்தாலும் சரி; சாகுபடிதார் இன்னும் பாக்கி கட்ட வேண்டுமென்று கோர்ட்டால் தீர்மானிக்கப்பட்ட தொகையை கெடுவுக்குள் சாகுபடிதார் கட்டிவிட்டாலும் சரி — சரியான கெடுவுக்குள் சாகுபடிதார் குத்தகைத் தொகையைச் செலுத்திவிட்டதாகவே பாவிக்கப்படும். சாகுபடிதார் கட்டிய தொகைபோக பாக்கி கட்ட வேண்டுமென்று உத்தரவு ஏற்பட்டும் கோர்ட்டாரால் அனுமதிக்கப்படும் கெடுவுக்குள் அவர் பாக்கியைக் கட்டத் தவறினால், அச்சாகுபடிதாரை நிலத்தை விட்டு கீழே கண்டிருக்கும் செக்ஷன் 3 (4) ஷரத்தின்படி அகற்ற நிலச் சுவான்தாருக்கு உரிமை உண்டு.

## எந்தக் "கோர்ட்டி"ல் குத்தகைத் தொகை கட்டப்பட வேண்டும்

எந்தக் கோர்ட்டில் சாகுபடிதாரை அகற்ற வேண்டுமென்று டிக்ரியோ உத்தரவோ ஏற்பட்டிருக்கிறதோ அந்தக் கோர்ட்டில்தான் சாகுபடிதார் தாம் கொடுக்கவேண்டிய குத்தகைத் தொகையைக் கட்டவேண்டும். அவ்விதம் எவ்வித டிக்ரியோ உத்தரவோ ஏற்படாமலிருந்தால் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் கோர்ட்டில் குத்தகைத் தொகையைக் கட்ட வேண்டும்.

செக்ஷன் 3 (3) (c)

## சாகுபடிதாரை எப்படி அகற்றுவது

[எந்த எந்த சந்தர்ப்பங்களில் சாகுபடிதாருக்கு இச் சட்டத்தின் செக்ஷன் 3 (1) ஆல் அளிக்கப்பட்ட பாதுகாப்பு கிடையாதென்று மேலே செக்ஷன் 3 (2)ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது.] (a) அவ்விதம் செக்ஷன் 3 (2) ல் குறிப்பிடப்பட்டிருக்கும் சாகுபடிதார்களை சாகுபடி நிலத்தை விட்டு அகற்ற வேண்டுமானால், நிலச் சுவான்தார் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசரிடம் மனுக் கொடுக்கவேண்டும். இம்மனுவுக்கு ஒரு ரூபாய் கோர்ட் பீசு ஸ்டாம்பு ஒட்டவேண்டும். சாகுபடிதாரை அகற்றும்படி ஏற்கனவே கோர்ட்டில் ஒரு டிக்ரி அல்லது உத்தரவு ஏற்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும் நிலச் சுவான்தார் இந்த ஷரத்துப்படி ரிவின்யூ டிவிஷனல் ஆபீசரிடம் மனுப் போட்டுத்தான் சாகுபடிதாரை அகற்ற முடியும். (b) இவ்வித மனு தாகல் செய்யப்பட்டவுடன், தங்கள் தங்கள் கட்சிகளைச் சொல்லிக்கொள்ள நிலச் சுவான்தாருக்கும், சாகுபடிதாருக்கும் நியாயமான சந்தர்ப்பம் அளித்து, ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் சுருக்கு முறையில் விசாரணை செய்து மனுவில் கேட்டிருக்கும்படி உத்தரவு செய்தாலும் செய்யலாம்; அல்லது மனுவைத் தள்ளினாலும் தள்ளலாம். ஆனால் குத்தகை பாக்கியை கெடுப்படி கொடுக்காமலும், அதை கோர்ட்டில் கட்டாமலும் இருக்கும் சாகுபடிதார்களுக்குக் குத்தகை பாக்கியை ஒரு கெடுவுக்குள் கட்டிவிடும்படி ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் உத்தரவு செய்யலாம். நிலச் சொந்தக்காரருடையவும் சாகுபடிதாரருடையவும் சமய சந்தர்ப்பங்களைக் கவனித்து நியாயமாகத் தோன்றும் கெடுவுக்குள் மேற்கண்டபடி குத்தகை பாக்கியைச் சாகுபடிதார் கட்டிவிடவேண்டுமென்று ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் உத்தரவிடுவார். சாகுபடிதார் அவ்வுத்தரவின்படி தொகை கட்டிவிட்டால் அவர் செக்ஷன் 3 (b) ஷரத்தில் கண்ட கெடுவுக்குள்ளாகவே குத்தகைத் தொகையைக் கொடுத்துவிட்டதாக பாவிக்கப்படும். சாகுபடிதார் அவ்விதம் கட்டாவிட்டால், அவரை நிலத்தைவிட்டு அகற்றும்படி ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் உத்தரவு செய்வார்.

செக்ஷன் 3 (4)

## 1-12-1953ல் இருந்த சாகுபடிதார்கள் மீண்டும் சுவாதீனம் பெறுவதற்கு உரிமை உண்டு

1-12-1953 தேதியில் சாகுபடி நிலத்தைத் தம்முடைய சுவாதீனத்தில் வைத்திருந்த சாகுபடிதாரிடம் இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியில் நிலசுவாதீனம் இல்லாவிட்டால், நிலத்தைத் தமக்குத் திரும்ப சுவாதீனம் கொடுக்க வேண்டுமென்று கேட்டு ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு மனுப் போட அச்சாகுபடிதாருக்கு உரிமை உண்டு. 1-12-1953 தேதியில் அந்த நிலத்தை எந்த ஏற்பாட்டின் பேரில் அவர் சுவாதீனம் வைத்திருந்தாரோ

செக்ஷன் 4 (1)

அதே ஷரத்துக்களின்படி மறுபடியும் நிலத்தை சுவாதீனத்தில் வைத்துக்கொள்ள சாகுபடிதாருக்கு உரிமை உண்டு.

## ஆனால் நிலத்தைத் திரும்ப சுவாதீனம் அடையும் உரிமை சில சாகுபடிதார்களுக்குக் கிடையாது

முன் ஷரத்தில் கண்டபடி திரும்ப நிலத்தை சுவாதீனம் அடையும் உரிமையானது அடியில் கண்ட சந்தர்ப்பங்களில் சாகுபடிதாருக்குக் கிடையாது. அவை யாவன:- (i) இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியில் சாகுபடிதாரிடம் சொந்தக்காரர் என்ற முறையிலோ, சாகுபடிதார் அல்லது குத்தகைதார் என்ற முறையிலோ அல்லது இரண்டு முறையிலும் சேர்த்தோ $6\frac{2}{3}$ ஏகருக்கு அதிகமான விஸ்தீர்ணமுள்ள நன்செய் நிலமோ அல்லது சர்க்கார் நீர்ப்பாசனமுள்ள புன்செய் நிலமோ இருந்தால், அச்சாகுபடிதார் மேற்கண்டபடி மனுப்போட முடியாது. ($6\frac{2}{3}$ ஏகர் நன்செய் என்பது 20 ஏகர் சர்க்கார் நீர்ப்பாசன வசதியில்லாத புன்செய் நிலத்திற்கு சமமானதென்று வைத்துக் கணக்கு செய்யப்படவேண்டும். உதாரணமாக ஒருவரிடம் 10 ஏகர் மேற்கண்ட புன்செய் நிலமும் 2 ஏகர் நன்செய் நிலமும் இருந்தால் அவரிடம் $5\frac{1}{3}$ ஏகர் நன்செய் நிலம் இருந்தால் எப்படியோ அப்படித்தான். ஏனென்றால் 10 ஏகர் புன்செய் என்பது $3\frac{1}{3}$ ஏகர் நன்செய் நிலத்துக்குச் சமமானது. இத்துடன் 2 ஏகர் நன்செய் நிலத்தைக் கூட்டிக்கொண்டால் அவரிடம் $5\frac{1}{3}$ ஏகர் நன்செய் நிலம் இருப்பதாக பாவிக்கப்படும்.)

செக்ஷன் 4 (2)

## 1953-54 அல்லது 1954-55 வருடத்தில் விற்பனைவரி, தொழில் வரி அல்லது வருமான வரி விதிக்கப்பட்ட சாகுபடிதார்களுக்கும் நிலம் திரும்பக் கிடைக்காது

1953-54 அல்லது 1954-55 இந்த இரண்டு வருடங்களில் எந்த வருடத்திலாவது அந்தந்தச் சட்டங்களின்படி விற்பனைவரியோ, தொழில்வரியோ, அல்லது வருமானவரியோ, விதிக்கப்பட்டிருக்கும் சாகுபடிதார்களும் தங்களுக்குத் திரும்ப சாகுபடி நிலம் சுவாதீனமாகவேண்டுமென்று மனுப்போட முடியாது.

## சில நிலச்சுவான்தார்களிடமிருக்கும் நிலத்தையும் சாகுபடிதார் திரும்ப சுவாதீனம் கேட்க முடியாது.

1953—54 அல்லது 1954—55 இந்த இரண்டு வருடங்களில் எந்த வருடத்திலும் அந்தந்தச் சட்டப்படி விற்பனை வரியோ, தொழில் வரியோ, வருமான வரியோ விதிக்கப்படாத ஒரு நிலச்சுவான்தாரானவர் தம்முடைய சொந்த நிலத்தையும் அவர் வேறு ஒருவரிடம் குத்தகைக்கு நிலம் ஒப்புக்கொண்டிருந்தால் அந்த நிலத்தையும் சேர்த்து $6\frac{2}{3}$ ஏகர் விஸ்தீர்ணத்திற்கு அதிகமில்லாத நன்செய் நிலம் அல்லது சர்க்கார் பாசனமுள்ள புன்செய் நிலத்தை (அல்லது 20 ஏகருக்கு மேற்படாத புன்செய் நிலத்தை) மட்டில் தம்முடைய சுவாதீனத்தில் வைத்துக்கொண்டு அந்த நிலத்தைத் தம்முடைய சொந்த உழைப்பைக் கொண்டோ அல்லது தம்முடைய குடும்பத்தினருடைய உழைப்பைக் கொண்டோ அல்லது தம்முடைய மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்ட கூலி ஆட்களின் உழைப்பைக் கொண்டோ நிலத்தைச் சாகுபடி செய்து வந்தால்—அவ்வித நிலச்சுவான்தாரிடம் இருக்கும் நிலங்கள் தமக்குத் திரும்ப சுவாதீனம் கிடைக்கவேண்டுமென்று கேட்க சாகுபடிதாருக்கு உரிமை இல்லை.

## 1-12-1953க்குப் பின் நிலத்தை வேறு சாகுபடிதாரிடம் கொடுத்திருந்தாலும் பழைய சாகுபடிதார் திரும்ப சுவாதீனம் கேட்க முடியாது.

1-12-1953க்குப் பிறகு நிலச்சுவான்தாரானவர் நிலத்தை நல்லெண்ணத்துடன் வேறு ஒரு சாகுபடிதாருக்குக் குத்தகைக்குவிட்டு, அச்சாகுபடிதாரும் இச்சட்டம் வருவதற்கு முன்பே நிலத்தைச் சாகுபடியும் செய்திருந்தால்—முன்பு இருந்த சாகுபடிதார் நிலத்தைத் திரும்ப சுவாதீனம் கேட்க முடியாது. ஆனால் புது சாகுபடிதாரிடம் சொந்தக்காரர் முறைமையிலும் சாகுபடிதார் முறைமையிலும் அல்லது இரண்டும் சேர்ந்து $6\frac{2}{3}$ ஏகர் நன்செய் நிலம் அல்லது 20 ஏகர் புன்செய் நிலத்திற்கு அதிக விஸ்தீர்ணமுள்ள வேறு நிலங்கள் சுவாதீனத்திலிருந்து, முன்பு அகற்றப்பட்ட பழைய சாகுபடிதாரிடம் அந்த அளவுக்குக் குறைவான விஸ்தீர்ணமுள்ள நிலங்களே இருந்தாலும் அல்லது யாதொரு நிலமும் இல்லாமலே இருந்தாலும் — பழைய சாகுபடிதார் நிலத்தைத் திரும்ப தம்முடைய சுவாதீனத்தில் அடைய உரிமை உண்டு.

## நிலம் திரும்பக் கிடைக்க மனுப்போட வேண்டும்.

மேலே செக்ஷன் 4 (1) ன்படி ரிவின்யூ

செக்ஷன் 4 (3)

டிவிஷனல் ஆபீசருக்குப் போடப்படும் மனு இச்சட்டம் அமுலுக்கு வந்தி விருந்து 30 நாட்களுக்குள் (அதாவது 27-10-1955க்குள்) போடப்படவேண்டும். மனுவுக்கு ஒரு ரூபாய் கோர்ட் பீசு ஸ்டாம்பு ஒட்ட வேண்டும்.

## தாமதமாகப் போடப்படும் மனுக்களையும் ஏற்றுக் கொள்ளலாம்

மேலே கண்ட 30 நாட்களுக்குள் மனுப் போடாததற்குப் போதுமான காரணம் காட்டினால், அக்கெடுவுக்குப் பிறகு போடப்படும் மனுக்களையும் ஏற்றுக்கொள்ள ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு அதிகாரம் உண்டு.

## மனு விசாரணை

மேலே 3-வது ஷரத்துப்படி கொடுக்கப்படும் மனுவின் பேரில் நிலத்தின் சொந்தக்காரருக்கும், அப்போது நிலத்தை சாகுபடி செய்யும் சாகுபடிதார் இருந்தால் அவருக்கும் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசரிடம் தங்களுடைய கட்சிகளைச் சொல்லிக்கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்படும். ரிவின்யூ டிவிஷனல் ஆபீசரானவர் மனுவை சுருக்கமான முறையில் விசாரணை செய்து, மனுவை ஏற்றுக்கொண்டாலும் கொள்ளலாம்; அல்லது தள்ளினாலும் தள்ளிவிடலாம். மனுவை ஏற்றுக்கொண்டு உத்தரவு செய்யும் போது கீழே கண்ட விஷயங்களைப் பற்றி அவருக்கு நியாயமாகவும் யுக்தமாகவும் தோன்றும் நிபந்தனைகளை ஏற்படுத்தவும் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு அதிகாரம் உண்டு. அதாவது (i) ஒரு வருட குத்தகை அல்லது பகுதித் தொகைக்கு அதிகப்படாமலிருக்கும் பாக்கியை மனுதார் நிலச்சுவான்தாருக்குக் கொடுத்துவிட வேண்டுமென்ற நிபந்தனை ஏற்படுத்தலாம். மேலும் (ii) மனுதார் சுவாதீனத்தில் இல்லாத காலத்தில் நிலத்தின் சொந்தக்காரரோ புதிய சாகுபடிதாரரோ அப்போது அறுவடையாகாதிருக்கும் பயிருக்காகச் செலவு செய்திருக்கும் தொகைகளை மனுதார் அவருக்குக் கொடுத்துவிட வேண்டுமென்ற நிபந்தனை ஏற்படுத்தினாலும் ஏற்படுத்தலாம். இவ்விதச் செலவு தொகை எவ்வளவு என்பதைப்பற்றியும் அதை எவ்விதம் திருப்பிக் கொடுப்பது என்பதைப் பற்றியும் கட்சிக்காரர்கள் தங்களுக்குள்ளேயே ஏற்பாடு செய்து கொள்ளாவிட்டால் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசரே மேலே கண்டபடி அது சம்பந்தமான நிபந்தனைகளை ஏற்படுத்துவார்.

## விளக்கம்

மேலே கண்டபடி நிலத்தின் சொந்தக்காரர் அல்லது புதிய சாகுபடிதார் செலவு செய்த தொகைகளை மனுதார் கொடுத்துவிடவேண்டுமென்று உத்தரவு செய்வதற்குப் பதிலாக ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் வேறுவிதமாகவும் உத்தரவு செய்யலாம். அதாவது தாம் உத்தரவு செய்யும்போது நிலத்தில் உள்ள மகசூல் அறுவடை செய்யப்பட்ட பிறகு நிலத்தை மனுதார் வசம் விட்டுவிடும்படியும் உத்தரவு பிறப்பிக்கலாம்.

## காலாவதி கெடு கணக்குச் செய்வது பற்றி

செக்ஷன் 5

சாகுபடிதாரை நிலத்திலிருந்து அகற்ற வேண்டுமென்று ஏற்பட்டிருக்கும் டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றுவதற்காகக் காலாவதி கெடுக் கணக்குச் செய்வதில், இச்சட்டத்தின் செக்ஷன் 3 ல் கண்டபடி சாகுபடிதாருக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கும் காலத்தை நீக்கிக் கணக்குச் செய்யவேண்டும்.

**விளக்கம்:** சாகுபடிதாரை நிலத்தை விட்டு அகற்றவேண்டுமென்று ஏற்பட்டிருக்கும் டிக்ரி அல்லது உத்தரவில் வேறு பரிகாரங்களும் அளிக்கப்பட்டிருந்தாலும் அவை சாகுபடிதாரை அகற்ற ஏற்பட்ட டிக்ரி அல்லது உத்தரவாகவே பாவிக்கப்படும்.

## சிவில் கோர்ட்டுக் களுக்கு அதிகாரம் இல்லை

செக்ஷன் 6

மேலே செக்ஷன் 3 (3) ஷரத்தில் குறிப்பிடப்படும் விஷயம் தவிர, இச்சட்டத்தின்படி ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் விசாரித்து முடிவு செய்யவேண்டியதாகக் கண்டிருக்கும் எந்த விஷயங்களைப் பொறுத்தும் எந்த சிவில் கோர்ட்டுக்கும் அதிகாரம் இல்லை. இச்சட்டத்தால் கொடுக்கப்படும் அதிகாரத்தை அனுசரித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பொறுத்தோ, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பொறுத்தோ எந்த கோர்ட்டும் 'இன்ஜங்ஷன்' என்ற தடை உத்தரவு பிறப்பிக்க அதிகாரமில்லை.

## விதிகள்

செக்ஷன் 7

(1) இச்சட்டத்தின் நோக்கங்களை அமுல் நடத்த ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டு. அவ்விதிகள் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். (2) விதிகள் ஏற்பட்டவுடன் அவைகள் ராஜ்ய சட்டசபைகள் இரண்டிலும் சமர்ப்பிக்கப்பட்டு பதினான்கு நாட்கள் வரை வைத்திருக்கப் படவேண்டும். அவ்விதிகளை ரத்து செய்யவும் திருத்தவும் சட்டசபைகளுக்கு அதிகாரமுண்டு.

# சென்னை சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டவிதிகள்

சென்னை சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டத்தின் செக்ஷன் 7 (1)ல் கண்ட அதிகாரங்களை உபயோகித்து சென்னை சர்க்காரால் விதிகள் இயற்றப்பட்டிருக்கின்றன. (இவ்விதிகள் 12-10-1955 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I ரூல் சப்ளிமெண்ட் 425-ம் பக்கத்தில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன.) இவ்விதிகளின் முக்கிய அம்சங்களாவன:- சென்னை சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டத்தின் செக்ஷன் 3 (3) ஷரத்துப்படி ஒரு சாகுபடிதாரானவர் கோர்ட்டிலோ ரிவின்யூ டிவிஷனல் ஆபீசரிடமோ தாம் கொடுக்கவேண்டிய குத்தகைத் தொகையைக் கட்ட நமூனா I ன்படி மனுப் போட வேண்டும். மனுவை நேரிலும் கொடுக்கலாம்; அதிகாரம் கொடுக்கப்பட்ட ஏஜண்டு மூலமாகவும் கொடுக்கலாம். இம்மனுவின் பேரில் நிலச்சுவான்தாருக்கு நோட்டீஸ் அனுப்பப்படும். மனுவில் கண்ட சங்கதிகளை நிலச்சுவான்தார் ஒப்புக் கொண்டால் நேரிலோ, அதிகாரம் பெற்ற ஏஜண்டு மூலமோ ஆஜராகி தமக்கு வரவேண்டிய குத்தகைத் தொகை ஜாடாவுக்குமாக கட்டப்பட்ட தொகையை வாங்கிக் கொள்ளத் தமக்குச் சம்மதம் என்று மனுப்போட்டுத் தொகையையும் பெற்றுக் கொண்டு விடலாம். மனுவில் கண்ட விஷயங்களை நிலச்சுவான்தார் ஒப்புக் கொள்ளாவிட்டால் ஆட்சேபனை ஸ்டேட்மெண்டு தாகல் செய்யலாம் மனுவிசாரணை நடத்தி முடிவு சொல்லப்படும்.

செக்ஷன் 3 (2) ன்படி ஒரு சாகுபடிதாரை நிலத்தை விட்டு அகற்ற நமூனா II ன்படி நிலச்சுவான்தார் மனுப்போட வேண்டும். மனுவை நேரிலோ, ஏஜண்டு மூலமோ ரிவின்யூ டிவிஷனல் ஆபீசரிடம் கொடுக்கலாம். அல்லது ரிஜிஸ்டர் தபால் மூலமும் அனுப்பலாம். ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் இல்லாவிட்டால் அவருடைய ஆபீஸ் தலைமை குமாஸ்தாவிடமும் கொடுக்கலாம்.

செக்ஷன் 4 (1) ன்படி சாகுபடிதார் தமக்கு திரும்பவும் குத்தகை நிலம் சுவாதீனம் கிடைக்க வேண்டுமென்று ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்குப் போடும் மனு நமூனா III ன்படி இருக்க வேண்டும். மனுதார் இம்மனுவை நேரிலோ, ஏஜண்டு மூலமாகவோ தாகல் செய்யலாம்; அல்லது ரிஜிஸ்டர் தபால் மூலமும் அனுப்பலாம்.

இச்சட்டப்படி கோர்ட்டிலோ, ரிவின்யூ டிவிஷனல் ஆபீசரிடமோ நடக்கும் நடவடிக்கைகளில், கட்சிக்காரர்க்குப் பதிலாக அவரிடம் அதிகாரம் பெற்ற ஏஜண்டே ஆஜராகி வழக்கை நடத்த அனுமதி கொடுக்க கோர்ட்டுக்கும் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கும் அதிகாரம் உண்டு. ஆனால் நடவடிக்கைகளின் எந்த கட்டத்திலும் இவ்வித அனுமதியை ரத்து செய்யவும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

கோர்ட்டுக்கும், ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கும் நிலங்களில் பிரவேசிக்கவும் சோதனைகள் நடத்தவும், சாட்சிகளை சம்மன் செய்யவும், கட்சிக்காரர்களையும் சாட்சிகளையும் விசாரணை செய்யவும் தஸ்தவேஜுகளை தாகல் செய்யும்படி உத்தரவிடவும் சிவில் வழக்கு முறைச் சட்டத்திலுள்ள அதிகாரங்கள் உண்டு.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
187741
சென்னை-600 008

## நமூனா I

சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டத்தின் செக்ஷன் 3 (3) ன் படி குத்தகைத் தொகையைக் கட்ட மனு:—

(1) சாகுபடிதாரின் (குத்தகைதாரின்) பெயரும் விலாசமும்

(2) சாகுபடி (குத்தகை) நிலங்களின் விபரம்:—

| கிராமம் தாலுக்கா | சர்வே நெ. | ஸ்தலப் பெயர் இருந்தால் | நன்செய், புன்செய், தோட்டம் அல்லது மானவாரி | விஸ்தீர்ணம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |

(3) (a) சாகுபடிக்கு ஒப்புக்கொள்ளப்பட்ட காலமும் குத்தகையும்

(b) குத்தகை இனமாகக் கொடுக்கப்பட வேண்டியிருந்தால் அதன் காலக்கிரயம்

(4) நிலச் சுவான்தார் அல்லது யாருக்குக் குத்தகை கொடுக்கப்பட வேண்டுமோ அவருடைய பெயரும் விலாசமும் (குத்தகையைப் பெற்றுக்கொள்ள பலர் பாத்தியங் கொண்டாடினால் எல்லாருடைய பெயரும் விலாசமும் கொடுக்கப்பட வேண்டும்.)

(5) கட்டப்படும் குத்தகைத் தொகை எவ்வளவு என்பதும் அது எந்த கெடுவுக்காகக் கட்டப் படுகிறதென்பதும்

(6) ஷரா.

இடம்

தேதி

மனுதார் கையெழுத்து.

மனுதாரின் உறுதிமொழி

1955-ம் வருடத்திய சென்னை சாகுபடி குத்தகைதார் பாதுகாப்புச் சட்டப்படி நான் அனுகூலமடையக் கூடிய ஒரு சாகுபடிதார் (குத்தகைதார்) என்பதை உறுதியாகச் சொல்லுகிறேன்.

மனுதார் கையெழுத்து.

## நமூனா II

சட்டத்தின் செக்ஷன் 3 (4) (a) ஷரத்தின்படி சாகுபடிதாரை (குத்தகைதாரை) நிலத்தை விட்டு அகற்ற மனு.

1. தாலூக்கா
2. கிராமம்
3. மனுதாரின் (நிலச்சுவான்தாரின்) பெயரும் முழு விலாசமும்
4. அகற்றப்படவேண்டிய சாகுபடிதாரின் (குத்தகைதாரின்) பெயரும் முழு விலாசமும்
5. ஸ்தலத்தின் சர்வே நம்பர், ஸ்தலப் பெயர் இருந்தால் அது, விஸ்தீர்ணம்
6. சாகுபடி (குத்தகை) ஒப்பந்த ஷரத்துக்கள்
7. (சாகுபடிதாரை) அகற்றுவதற்கான காரணங்கள்
8. ஷரா. (புகாரின் சுருக்கம்)

மனுதார் கையெழுத்து

## நமூனா III

சட்டத்தின் செக்ஷன் 4 (1) ன்படி சாகுபடி (குத்தகை) நிலம் திரும்ப சுவாதீனம் கிடைக்க மனு.

1. தாலூக்கா
2. கிராமம்
3. மனுதாரின் பெயரும் விலாசமும்
4. நிலச்சுவான்தாரின் பெயரும் விலாசமும்
5. நிலங்களின் விபரம்

| சர்வே நம்பர் | ஸ்தலப் பெயர் (இருந்தால்) | நன்செய் புன்செய் தோட்டம் அல்லது மானவாரி | மொத்த விஸ்தீர்ணம் | திரும்பக் கேட்கும் விஸ்தீர்ணம் | சர்க்கார் நீர்ப் பாசனத்திலிருந்து சாகுபடியாகிறதா அல்லவா |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |

(6) 1—12—1953 தேதியில் மனுதார், அந்த நிலங்களை எந்த ஏற்பாட்டின் பேரில் எந்த குத்தகை ஷரத்துக்களின்படி சுவாதீனம் வைத்துக்கொண்டிருந்தார் என்பது

(7) சுவாதீனம் இழந்த தேதி

(8) 1-12-1953 க்குப் பிறகு நிலங்கள் வேறு குத்தகைதாருக்குக் குத்தகைக்கு விடப்பட்டிருந்தால் அவருடைய பெயரும், விலாசமும். எந்த ஏற்பாட்டின் பேரில் அவர் நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறார் என்பதும், அவர் 27—9—1955 தேதிக்கு முன்பு நிலத்தை சாகுபடி செய்திருக்கிறாரா என்பதும்.

(9) 27 — 9 — 1955 தேதியில் சொந்தக்காரர் முறைமையிலோ, சாகுபடிதார் அல்லது குத்தகைதார் முறைமையிலோ, அல்லது இரண்டு முறைமையிலுமோ, மனுதாரின் சுவாதீனத்தில் உள்ள நிலங்களின் விஸ்தீர்ணம் (நன்செய், சர்க்கார் நீர்ப்பாசன வசதிகளிலிருந்து பாசனமுள்ள புன்செய், மற்ற புன்செய் இவைகளைத் தனித் தனியாகக் காண்பிக்க வேண்டும்.)

(10) 1953 — 54 அல்லது 1954 — 55 வருடத்தில் அந்தந்தச் சட்டங்களின்படி மனுதாருக்கு விற்பனை வரியோ, தொழில் வரியோ, அல்லது வருமான வரியோ ஏதாவது விதிக்கப்பட்டிருந்ததா.

(11) ஷரா. (மனுப்போடுவதன் காரணங்கள் சுருக்கமாக.)

மனுதாரின் கையெழுத்து.

# Madras Cultivating Tenants Protection Act 1955
## *(Act No. XXV of 1955)*

An Act for the protection from eviction of cultivating tenants in certain areas in the State of Madras.

Whereas it is necessary to protect cultivating tenants in certain areas in the State of Madras from unjust eviction;

Be it enacted in the Sixth Year of the Republic of India as follows:—

1. Short title, extent and duration — (1) This Act may be called the Madras Cultivating Tenants Protection Act 1955.

(2) It extends to the whole of the State of Madras, except—

(i) the districts of Malabar and South Kanara;

(ii) the Gudalur taluk of the Nilgiri district; and

(iii) the areas in which the provisions of the Tanjore Tenants and Pannaiyal Protection Act, 1952 (Madras Act XIV of 1952), are in force.

(3) It shall remain in force for a period of one year.

2. Definitions.—In this Act, unless the context otherwise requires—

(a) "cultivation tenant" means a person who cultivates, by his own labour or by that of any other member of his family or by hired labour under his supervision and control, any land belonging to another, under a tenancy agreement, express or implied, and includes—

(i) any such person who continues in possession of the land after the determination of the tenancy agreement; and

(ii) the heirs of such person;

(d) "cultivation" means the use of lands for the purpose of agriculture or horticulture;

(c) "holding" means a parcel or parcels of land held by a cultivating tenant;

(d) "land" means land used for the purpose of agriculture or horticulture and includes any building, or any waste, vacant or forest land, appurtenant thereto, and any house-site belonging to the landlord and led to the cultivating tenant under the same agreement of tenancy:

(e) "landlord" in relation to a holding or part thereof means the person entitled to evict the cultivating tenant from such holding or part;

(f) "Revenue Divisional Officer" means the Revenue Divisional Officer in whose jurisdiction the holding in question or part thereof is situate or an officer of the Revenue Department not lower in rank than the Revenue Divisional officer, empowered by the State Government in this behalf.

3. Landlords not to evict cultivating tenants.—(1) Subject to the next succeeding sub-sections, no cultivating tenant shall be evicted from his holding or any part thereof, during the continuance of this Act, by or at the instance of his landlord, whether in execution of a decree or order of a Court or otherwise.

(2) Subject to the next succeeding sub-section, Sub-section (1) shall not apply to a cultivating tenant—

(a) who, if in arrear at the commencement of this Act with respect to rent payable to the landlord and accrued due subseqaent to the 31st March 1954, does not pay such rent within a month after the commencement of this Act or who, after the commencement of this Act, does not pay rent within a month after such rent acerues due; or.

(b) who has done any act or has been guilty of any negligence which is destructive of, or injurious to, the land or any crop thereon or has altogether ceased to cultivate the land; or

(c) who has used the land for any purpose not being an agricultural or horticultural purpose; or

(d) who has wilfully denied the title of the landlord to the land.

Explanation.—A denial of the landlord's title under a bonafide mistake of fact is not wilful within the meaning of this clause.

(3) (a) A cultivating tenant may deposit in Court the rent or, if the rent be payable in kind, its market value on the date of deposit, to the account of the landlord—

(i) in the case of r nt accrued due subsequent to the 31st March 1954, within a month after the commencement of this Act.

(ii) in the case of rent accrued due after the commencement of this Act, within a month after the date on which the rent accrued due.

(b) The Court shall cause notice of the deposit to be issued to the landlord and determine, after a summary enquiry, whether the amount deposited represents the correct amount of rent due from the cultivating tenant. If the Court finds that any further sum is due, it shall allow the cultivating tenant such time as it may consider just and reasonable having regard to the relative circumstances of the landlord and the cultivating tenant for depositing such further sum inclusive of such costs as the Court may allow. If the Court adjudges that no further sum is due, or if the cultivating tenant deposits within the time allowed such further sum as is ordered by the Court, the cultivating tenant shall be deemed to have paid the rent within the period speeified in the last foregoing sub-section. If, having to deposit a further sum, the cultivating tenant fails to do so within the time allowed by the Court, the landlord may evict the cultivating tenant as provided in sub-section *(4)*.

(c) The expression "Court" in this sub-section means the Court which passed the decree or order for eviction or, where there is no such decree or order, the Revenue Divisional Officer.

(4) (a) Every landlord seeking to evict a cultivating tenant falling under sub-section *(2)* shall, whether or not there is an order or decree of a court for the eviction of such cultivating tenant, make an application to the Revenue Divisional Officer and such application shall bear a court-fee stamp of one rupee.

(b) On receipt of such application, the Revenue Divisional Officer shall, after giving a reasonable opportunity to the landlord and the cultivating tenant to make their representations, hold a summary enquiry into the matter and pass an order either allowing the application or dismissing it and in a case falling under clause *(a)* of sub-section *(2)* in which the tenant had not availed of the provisions contained in sub-section *(3)*, the Revenue Divisional Officer may allow the cultivating tenant such time as he considers just and reasonable having regard to the relative circumstances of the landlord and the cultivating tenant for depositing the arrears of rent payable under this Act inclusive of such costs as he may direct. If the cultivating tenant deposits the sum as directed, he shall be deemed to have paid the rent under sub-section *(3) (b)*. If the cultivating tenant fails to deposit the sum as directed, the Revenue Divisional Officer shall pass an order for eviction.

4. Right to restoration of possession.—*(1)* Every cultivating tenant who was in possession of any land on the 1st December 1953 and who is not in possession thereof at the commencement of this Act shall, on application to the Revenue Divisional Offlcer, be entitled to be restored to such possession on the same terms as those applicable to the possession of the land on the 1st December 1953.

(2) Nothing in sub-section *(1)* shall be deemed to entitle any such cultivating tenant to restoration of possession—

(i) if, on the day this Act comes into force, he is in possession, either as owner or as tenant or as both, of land exceeding the extent specified in the Explanation below or if he has been assessed to any sales-tax, profession-tax or income-tax under the respective laws relating to the levy of such taxes during 1953-54 or 1954-55; or

(ii) if the landlord, after evicting such cultivating tenant from the land, has been cultivating the land by his own labour or by that of any other member of his family or by hired labour under his supervision or control, provided as follows:—

(a) the total extent of land held by such landlord inclusive of the land, if any held by him as a tenant does not exceed the extent specified in the Explanation below; and

(ii) the landlord has not been assessed to any sales-tax, profession-tax or income-tax under the respective laws relating to the levy of such taxes during 1953-54 or 1954-55; or

(iii) if subsequent to the 1st December 1953, the landlord has bona fide admitted some other cultivating tenant to the possession of land and such other tenant has cultivated the land before the commencement of this Act;

Provided that where such other tenant is in possession, either as owner or as tenant or as both of any other land which exceeds the extent specified in the Explanation below and the cultivating tenant who was evicted is not in possession of any land or is in possession of any other land which is less than the extent specified in the said Explanation, the cultivating tenant shall be entitled to restoration of possession.

Explanation.—The extent referred to in clauses (i) to (iii) above is 6-2/3 acres of wet land or dry land irrigated from any Government source of irrigation, which shall be taken to be equivalent to 20 acres of dry land not irrigated from any Government source of irrigation for the purpose of determining the extent of land in any case where it consists of one or more of the classes of land mentioned above.

(3) Every application to a Revenue Divisional Officer under sub-section (1) shall be made within thirty days from the cnmmencement of this Act, and shall bear a court-fee stamp of one rupee:

Provided that the application may be received after the period of thirty days aforesaid, if the applicant satisfies the Revenue Divisional Officer that he had sufficient cause for not making the application within that period.

(4) On receipt of an application under sub-section (3), the Revenue Divisional Officer shall, after giving a reasonable opportunity to the landlord and the cultivating tenant, if any, in possession of the land, to make their representations, hold a summary inquiry into the matter and pass an order either allowing the application or dismissing it. In passing an order allowing the application, the Revenue Divisional Officer may impose such conditions as he may consider just and equitable including conditions in regard to—

(i) the payment by the applicant of any arrear of rent already due from him to the landlord, but not exceeding in amount one year's rent, and

(ii) the reimbursement by the applicant of the landlord or the other cultivating tenant in respect of the expenses incurred or the labour done by him during the period when the applicant was not in possession, on any crop which has not been harvested, if an agreement is not reached between the parties as regards the rates and manner of such reimbursement.

Explanation.—In lieu of imposing any condition relating to reimbursement as provided in clause (ii), the Revenue Divisional Officer may, in his discretion, postpone the restoration of the applicant to possession of the land, until any crop which is being grown thereon at the time when the order is passed, has been harvested.

5. Exclusion of time for limitation.—In computing the period of limitation or limit of time prescribed for an application for the execution of a decree or order for the eviction of a cultivating tenant, the time during which he was protected by section 3 from eviction shall be excluded.

Explanation.—A decree or order shall be deemed to be a decree or order for the eviction of a cultivating tenant, notwithstanding that any other relief is also granted by such decree or order.

6. Bar of jurisdiction of civil courts.—No civil court shall, except to the extent specified in section 3 (3), have jurisdiction in respect of any matter which the Revenue Divisional Officer is empowered by or under this Act to determine and no injunction shall be granted by any court in respect of any action taken or to be taken in pursuance of any power conferred by or under this Act.

7. Power to make rules.—(1) The State Government may, by notification in the Fort St. George Gazette, make rules to carry out the purposes of this Act.

(2) All rules made under this section shall be laid for not less than fourteen days before both Houses of the State Legislature, as soon as possible after they are made, and shall be subject to such modifications whether by way of repeal or amendment, as those Houses may make during the session in which they are laid.




இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் தமிழில் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித் தனியான காகிதத்தில், பதில் எழுத இடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர, ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப் பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில்தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவதும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுவதும் இயலாது.

### இந்துச் சட்டம் — சுவீகாரம் போனவர்களுக்குத் தகப்பன் சொத்தில் பாத்தியம் உண்டா ?

26. கேள்வி: (சந்தா 3883— M. சுப்பிரமணியம் ஆகூர்.) சுவீகாரம் போனவர்களுக்குத் தகப்பன் சொத்தில் (பிதுரார்ஜித சொத்தில்) பாகம் உண்டா?

பதில்: இந்துச் சட்டப்படி ஒரு குடும்பத்திலிருந்து வேறு ஒருவருக்குச் சட்டப்படிச் சுவீகாரம் போனவர், தம்முடைய 'ஜனக'க் குடும்பத்தில் (அதாவது தாம் பிறந்த குடும்பத்தில்) தமக்குள்ள எல்லா சொத்துரிமைகளையும் இழப்பார். சுவீகாரம் போனவருக்குத் தம்முடைய 'ஜனக'த் தகப்பனுடைய பிதுரார்ஜித சொத்தில் பாகம் கிடையாது.

### அபராத தண்டனை அடைந்த கிராம மணியக்காரர் வேலைபார்க்க அருகதை யுள்ளவரா ?

27. கேள்வி: (L. 29 ராமசாமி-விருதாசலம்) ஒரு கிராம மணியக்காரர் (வில்லேஜ் முன்சீப்) 'பப்ளிக் சர்வெண்ட்' என்ற முறையில் தெரிவிக்க வேண்டிய விஷயத்தை தெரிவிக்காமல் விட்டு விட்டதற்காகப் போலீசாரால் சார்ஜ் செய்யப்பட்டு இந்தியன் பீனல் கோடு 176-செக்ஷன்படி மாஜிஸ்ட்ரேட்டால் ரூ. 50 அபராதம் விதிக்கப்பட் டிருக்கிறார். அவர் மணியம் வேலைபார்க்க அருகதை யுள்ளவரா?

பதில்: இத்தண்டனை காரணமாக கிராம மணியக்காரர் பதவி வகிப்பது சரி அல்ல என்று கலெக்டருக்குத் தோன்றினால், அவரை வேலையினின்று நீக்கிவிட கலெக்டருக்கு அதிகாரம் இருக்கிறது.

### கோர்ட்டுக்கு வெளியே தீர்ந்து போகும் வழக்குகள்

28. கேள்வி: (R. வெங்கடராமன் - மதுரை) ஒரு வியாஜ்யம் கோர்ட்டில் விசாரணைக்கு வராத சமயத்தில் வாதியும் பிரதிவாதியும் தங்களுடைய தகராரைக் கோர்ட்டுக்கு வெளியே தீர்த்துக்கொண்டு (Settled out of court) ஒரு எக்ரிமெண்ட்டு செய்துகொண்டார்கள். தாங்கள் ஒரு ஏற்பாடு செய்து கொண்ட விஷயத்தைக் கோர்ட்டில் தெரிவிக்காமலும், வாதி கோர்ட்டுக்கு வராமல் அந்த வியாஜ்யம் தள்ளுபடியானால், வாதியின் மீது குற்றம் தானே? பிரதிவாதி, வாதியின் மீது தன்னை அவமானப் படுத்தினார் என்று அவர்மீது நடவடிக்கை எடுக்கலாமா?

பதில்: வாதியின் நடத்தையில் குற்றம் ஒன்றுமில்லை. அதற்காக வாதிமீது பிரதிவாதி எவ்விதமான நஷ்ட நடவடிக்கையும் எடுக்க முடியாது. வாதி கோர்ட்டில் ஆஜரில்லாத காரணத்தினால் வாதியின் தாவாவைத் தள்ளிவிடக் கோர்ட்டுக்கு அதிகாரமிருக்கிறது. கோர்ட்டுக்கு வெளியே கட்சிக்காரர்களே தங்களுடைய வழக்கைத் தீர்த்துக்கொண்டு

விட்ட விஷயத்தை வாதியோ, பிரதிவாதியோ கோர்ட்டுக்குத் தெரிவித்தாலும், தாவா தள்ளு படிதான் ஆகும். கோர்ட்டுக்கு வெளியே தம் முடைய வழக்குக்குப் பரிகாரம் அடைந்த வாதிகள் சிலர் வேறு காரணங்களினல் கோர்ட்டுப் பக்கம்போகாமல் இருக்கும் பழக்க மும் இருந்து வருகிறது, அதனல் நஷ்டம் அடைபவர்கள் வேறு யாராக இருந்தாலும், பிரதிவாதிக்கு எவ்வித நஷ்டமும் இல்லை.

## தொழிலாளர் நடுவில் வேலையி லிருந்து நின்று விட்டால் அவருக்கு 'பிராவிடெண்ட்'த் தொகை எவ்வளவு கிடைக்கும்?

29. கேள்வி: (சந்தா நெ. 2750. M. ஜெகன்னதம்) 1952-ம் வருடம் 'பிராவிடெண்ட் பண்டு ஆக்ட்'படி தொழிலாளியும் முதலாளியும் சேர்ந்து கட்டிவரும் 'கண்ட்ரிபூஷன்' தொகை பூராவும் எத்தனை வருடத்தில் தொழிலாளிக்குக் கிடைக்கும்? ஷை சட்டப்படி பிராவிடெண்ட் பண்டு கட்டிவரும் தொழிலாளி இரண்டு வருடம் கழித்து நின்றுவிட்டால், முதலாளி கட்டும் தொகையில் எவ்வளவு ரூபாய் வரும். நான்கு வருடம் கழித்து நின்றுவிட்டால் எவ்வளவு ரூபாய் வரும்?

பதில்: 1952-ம் வருடத்திய பிராவிடெண்ட் பண்டுச் சட்டத்தின் 5-வது செக்ஷனில் கண்ட அதிகாரங்களை உபயோகித்து மத்திய சர்க்காரால் 'பிராவிடெண்ட் பண்டு ஸ்கீம்' (The Employees' Provident funds Scheme 1952) என்று விதிகள் இயற்றப்பட்டிருக்கின்றன. (இவ்விதிகள் 2-9-1952 தேதி இந்தியா கெஜட் பாகம் II (3) விசேஷ வெளியீடு பக்கம் 807ல் பிரசுரமாகி இருக்கின்றன.) இந்த விதிகளின் 69-வது ஷரத்தின்படி தொழிலாளியானவர் 55 வயது பூர்த்தியான பிறகு வேலையிலிருந்து 'ரிடையர்' ஆனுலும் சரி; தொழிலாளியினுடைய தேக அசௌக்கியம் அல்லது மனவியாதி காரணமாக நிரந்தரமாகவும் முற்றிலும் வேலை செய்ய முடியாதென்று டாக்டர் சர்டிபிகேட்டின் பேரில் வேலையிலிருந்து 'ரிடையர்' ஆனுலும் சரி, பிராவிடெண்ட் பண்டுத்தொகை பூராவையும், அதாவது முதலாளியால் கட்டப்பட்ட கண்ட்ரிபூஷன் தொகை, தொழிலாளரால் கட்டப்பட்ட தொகை எல்லாவற்றையும் தொழிலாளர் பெற்றுக்கொண்டு விடலாம். அப்படிக்கில்லாமல் ஒரு தொழிலாளர் தொழிற்சாலை வேலையிலிருந்து நின்றுவிட்டால், ஒரு வருடம் கழித்துத் தம்முடைய பிராவிடெண்ட் பண்டுத்தொகையை பெற்றுக்கொள்ள மனுப் போடலாம். தொழிலாளர் 5 வருடங்களுக்குக் குறைவான காலத்திற்கே அத் தொழிற்சாலையில் வேலைசெய்து வந்தவராக இருந்தால், அவர் செலுத்திய கண்ட்ரிபூஷன் தொகையும் அதன் வட்டியும்தான் அவருக்குக் கொடுக்கப்படும். முதலாளியால் கொடுக்கப்பட்ட கண்ட்ரிபூஷன் தொகையும் அதன் வட்டியும் தொழிலாளருக்குக் கிடைக்காது. அத்தொகை மொத்த பண்டுக்கு பறிமுதல் செய்யப்படும்.

## 18-5-1955 க்குமுன் போடப்பட்ட தாவா சம்பந்தமான பிந்திய நடவடிக்கைகளுக்குப் பழைய கோர்ட் பீசுச் சட்டப்படிக்கே ஸ்டாம்பு

30. கேள்வி (L. 46) கோர்ட் பீசுக் கட்டணச் சட்டம் இப்போது திருத்தப்பட்டிருக்கும் நிலைமையில், 18-5-1955 க்குமுன் போடப்பட்ட தாவாக்களில் ஏற்பட்டிருக்கும் டிக்ரிகளை நிறைவேற்ற மனுப் போடுவதில், டிக்ரி நகலுக்கு ஒட்ட வேண்டிய ஸ்டாம்பு முன் சட்டப்படிக்கா? அல்லது இப்புதிய சட்டப்படிக்கா? அவ்வித நிறைவேற்ற மனுவில் பிரதிவாதிகளுக்காகத் தாகல் செய்யப்படும் வகாலத்துக்களுக்கு ஸ்டாம்பு முன் சட்டப்படிக்கா அல்லது புதிய சட்டப்படிக்கா?

பதில்: இப்பிரச்னை சம்பந்தமாகச் சமீபத்தில் (23-9-1955ல்) சென்னை ஹைகோர்ட்டில் உயர் நீதிபதி கிருஷ்ணசுவாமி நாயுடு அவர்களால் ஒரு தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. புதிய கோர்ட் பீசுச் சட்டம் 18-5-1955ல் அமுலுக்கு வந்தது. அத்தேதிக்கு முன்பு போடப்பட்ட தாவா அல்லது நடவடிக்கைகள் சம்பந்தமாக புதிய கோர்ட்பீசுச் சட்டம் வந்தபிறகு போடப்படும் எல்லா நடவடிக்கைகளுக்கும் (proceedings) பழைய கோர்ட் பீசுச் சட்டப்படிக்கேதான் ஸ்டாம்பு கட்ட வேண்டுமென்று செக்ஷன் 87 (2)ல் இருக்கிறது. புதிய கோர்ட் பீசுச் சட்டம் வருவதற்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட தாவா அல்லது வேறு நடவடிக்கைகள் சம்பந்தமாக புதிய சட்டம் வந்த பிறகு போடப்படும் நகல் மனு, வகாலத்து, டிக்ரி அல்லது ஜட்ஜ்மெண்ட் காபிகளுக்கு ஒட்ட வேண்டிய ஸ்டாம்பு எல்லாம் பழைய சட்டப்படிக்கேதான் என்று உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டுத் தீர்ப்பளித்திருக்கின்றனர்.



# வழக்கும் தீர்ப்பும்

[இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி, சட்ட விளக்கம் செய்யப்படும்.]

## விற்பனை வரி — வெளி ராஜ்ய வியாபாரம் பற்றி சுப்ரீம் கோர்ட்டாரின் புதிய தீர்ப்பு. முன்பு இதே விஷயமாக சுப்ரீம் கோர்ட்டார் செய்த தீர்ப்பு சரி அல்ல என இத்தீர்ப்பில் 'மெஜாரடி' அபிப்பிராயம். வெளி ராஜ்ய வியாபாரிகள் மீது விற்பனைவரி விதிப்பது செல்லாது.

சென்ற 6-9-1955 தினம் விற்பனை வரி சம்பந்தமாக டில்லியிலிருக்கும் நமது சுப்ரீம் கோர்ட்டார் மிக முக்கியமானதொரு தீர்ப்பு அளித்திருக்கின்றனர். பெங்கால் இம்யூனிடி கம்பெனி லிமிடெட் என்ற கம்பெனியார் செய்த அப்பீலில் இத்தீர்ப்பு அளிக்கப்பட்டிருக் கிறது. இத்தீர்ப்பில் முடிவு செய்யப்பட்ட அதே சட்டப் பிரச்னையைப் பற்றி, ஏற்கனவே ஒரு வழக்கில், அதாவது யுனைடெட் மோட்டார்ஸ் வழக்கு என்ற அப்பீல் வழக்கில் சுப்ரீம் கோர்ட்டாரால் அளிக்கப்பட்டு இப்போது எல்லா ராஜ்ய சர்க்கார்களாலும் அமுல் நடத்தப்படும் தீர்ப்பு சரி அல்ல என்று பிரஸ்தாப வழக்கில் வேறு விதமாக சுப்ரீம் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருப்பதால், இவ் வழக்கின் தீர்ப்பானது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இத்தீர்ப்பின்படி, எந்த ராஜ்யமும் வெளி ராஜ்ய வியாபாரிகள் மீது விற்பனை வரி விதிக்க முடியாதெனப் பொதுவாகச் சொல்லாம்.

இவ் வழக்கின் விபரம்:—

பெங்கால் இம்யூனிடி கம்பெனியார் என்பவர்கள் மேற்கு வங்காள ராஜ்யத்தில், அதாவது கல்கத்தாவில், தலைமை ஆபீஸ் வைத்துக் கொண்டு மருந்துச் சரக்குகள் வியாபாரம் செய்கின்றனர். இக் கம்பெனியாருடைய சரக்குகளை, 'ஆர்டரின்' பேரில் அடுத்த ராஜ்யமாகிய பீஹார் ராஜ்யத்திலுள்ள நபர்களுக்கு விற்பனை செய்து, சரக்குகளையும் பீஹார் ராஜ்யத்தில் 'டிலிவரி' கொடுத்து வந்தனர். யுனைடெட் மோட்டார்ஸ் வழக்கில் ஏற்கனவே சுப்ரீம் கோர்ட்டார் அளித்திருக்கும் தீர்ப்பின்படி, இக் கம்பெனியார் பீஹார் ராஜ்ய சர்க்காருக்கு விற்பனை வரி கொடுக்கக் கடமைப் பட்டவர்களாவார்கள். பீஹார் ராஜ்ய விற்பனை வரி அதிகாரிகள், இக் கல்கத்தா கம்பெனியாருக்கு நோட்டீசு அனுப்பி தங்களுடைய ராஜ்ய விற்பனைவரிச் சட்டப்படி கம்பெனியை 'ரிஜிஸ்டர்' செய்துகொண்டு, தங்களுடைய பீஹார் ராஜ்யத்தில் அக் கம்பெனியார் விற்றுமுதல் செய்திருக்கும் விற்பனைகளுக்கு விற்பனை வரி கொடுக்கும்படி உத்தரவிட்டனர். அரசியல் அமைப்புச்சட்டப்படி இவ்வுத்தரவு செல்லாதென கல்கத்தா கம்பெனியார் பாட்னா ஹைகோர்ட்டுக்கு 'ரிட்' மனுக் கொடுத்து அவ்வுத்தரவை ரத்து செய்யும்படி கேட்டனர். இம்மனுவை பாட்னா ஹைகோர்ட்டார் ஏற்றுக் கொள்ளவில்லை. அதன் பேரில் பெங்கால் இம்யூனிடி கம்பெனியார் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர். சுப்ரீம் கோர்ட்டில் இவ்வப்பீல் வழக்கை ஏழு உயர் நீதிபதிகள் சேர்ந்து வாக்கு வாதங்களைக் கேட்டு, அரசியல் அமைப்புச் சட்ட ஷரத்துக்களை ஆராய்ந்தனர். பிரஸ்தாப வழக்கில், மேற்குவங்காள வியாபாரக் கம்பெனியார்மீது விற்பனைவரி விதிக்க பீஹார் ராஜ்ய சர்க்காருக்கு அரசியல் அமைப்புச் சட்டப்படி இப்போது அதிகாரமில்லை என சுப்ரீம் கோர்ட்டார் தீர்ப்பளித்தனர். ஏழு நீதிபதிகளில் பெரும்பான்மையான நான்கு நீதிபதிகள் மேற்கண்டவாறு அபிப்பிராயப்பட்டுத் தீர்ப்பளித்தனர். மூன்று நீதிபதிகள் வேறு விதமாக அபிப்பிராயப் பட்டாலும் பெரும்பான்மை நீதிபதிகளின் அபிப்பிராயமே தீர்ப்பாகும். சுப்ரீம் கோர்ட்டாருக்கு முன்பு சொன்ன தீர்ப்பு சரி அல்ல என்று வேறு விதமாக அபிப்பிராயப்பட்டுத் தீர்ப்பளிக்கவும் உரிமை உண்

டென்பதும் இவ்வழக்கில் விளக்கப்பட்டிருக்கிறது. நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி 7-வது ஷெடியூல் இரண்டாவது ஜாப்தா, ஐடம் 54 ன்படி) சமாசாரப் பத்திரிகைகளை தவிர மற்ற எந்த சரக்குகளின் விற்பனை அல்லது வாங்குதல் (Sale or Purchase) மீது விற்பனை வரி விதிக்க அந்தந்த ராஜ்ய அரசாங்கத்துக்குத்தான் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது விற்பனை வரி விதிக்கவும் அதற்காகச் சட்டங்கள் இயற்றவும் இந்திய மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரமில்லை. இதற்கான சட்டங்களை அந்தந்த ராஜ்ய சட்ட சபைகளே செய்துகொள்ள வேண்டும். ஆனால் இவ்விதம் அந்தந்த ராஜ்யங்கள் தனித்தனி விற்பனை வரிச் சட்டம் செய்து கொள்ளுவதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் சில நிபந்தனைகளும் வரம்புகளும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 286 என்ற ஷரத்தில் இந்நிபந்தனைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஷரத்தின்படி எந்த ராஜ்யமும் சில்வகை விற்பனைகளின் மீது (‘விற்பனை’ என்று சொல்லும்போது ‘விற்பனை’ அல்லது ‘வாங்குதல்’ என்று சேர்த்துக்கொள்ளவும்.) விற்பனை வரி விதிக்க முடியாது. அவையாவன:— அந்த ராஜ்யத்தில் ஏற்படாமல் வெளியே ஏற்படும் விற்பனைகள் மீதும்; இந்தியாவுக்குள் சரக்குகள் வெளிநாடுகளிலிருந்தும் இறக்குமதியாகும் போதும், இந்தியாவிலிருந்து வெளி நாடுகளுக்கு சரக்குகள் ஏற்றுமதியாகும் போதும் ஏற்படுகின்ற விற்பனைகளின் மீதும்; இந்தியாவிலுள்ள ராஜ்யங்களினிடையே நிகழும் வர்த்தகத்தில் (Inter - State trade or Commerce) ஏற்படும் விற்பனைகளின் மீதும். எவ்வித ராஜ்ய அரசாங்கமும் விற்பனை வரி விதிக்க முடியாது. ஆனால் ராஜ்யங்களினிடையே நடக்கும் வர்த்தகத்தில் ஏற்படும் விற்பனை சம்பந்தமாக வேறு விதமாக சட்டம் செய்ய மத்திய பார்லிமெண்டுக்கு அதிகாரம் இருக்கிறது. (இதுவரை பார்லிமெண்டுக்கு அவ்விதச் சட்டம் ஒன்றும் செய்யவில்லை.)

மேற்கண்ட அரசியல் அமைப்புச் சட்ட ஷரத்துக்கு அர்த்தம் செய்யும்போதுதான் சுப்ரீம் கோர்ட்டார் இவ்வழக்கில் தீர்ப்பளித்திருக்கின்றனர்.

மேற்கு வங்காள ராஜ்யத்திலுள்ள கம்பெனியார், பீஹார் ராஜ்யத்தில் சரக்குகளை விற்பனை செய்தது ராஜ்யங்களிடையே நடக்கும் வர்த்தகமாகும் (Inter State Trade or commerce) என்றும்; இது விஷயமாக நமது பார்லிமெண்ட் ஒரு சட்டம் இயற்றும் வரை இவவித விற்பனைகளின் மீது விற்பனைவரி விதிக்க எந்த ராஜ்யத்திற்கும் உரிமை இல்லை என்றும் இப்போது சுப்ரீம் கோர்ட்டார் தீர்ப்பளித்திருக்கின்றனர்.

[குறிப்பு:— ஏற்கனவே யுனைடெட் மோட்டார்ஸ் வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பை அனுசரித்து இந்தியாவிலுள்ள எல்லா ராஜ்ய அரசாங்கங்களும் தங்கள் தங்கள் ராஜ்யங்களுக்குச் சரக்கு அனுப்பும் வெளி ராஜ்ய வியாபாரிகள் மீது விற்பனை வரி விதித்து வசூல் செய்து வருகின்றனர். இதற்காக விவரமான விதிகளும் அடிக்கடி இயற்றி வருகின்றனர். இப்போது பெங்கால் இம்யூனிடி கம்பெனியார் வழக்கில் ஏற்பட்டிருக்கும் சுப்ரீம் கோர்ட்டாரின் இத்தீர்ப்பின்படி ராஜ்ய அரசாங்ககங்களின் மேற்கண்ட நடவடிக்கைகளும், விதி முதலியவைகளும் செல்லாதென ஏற்படுகிறது. குழப்பம் ஏற்படாமலிருக்கும் பொருட்டு அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்ட்டிகிள் 286 (2) ஷரத்தை அனுசரித்து பார்லிமெண்ட் சபையார் உடனடியாகச் சட்டம் செய்வது அவசியமாகும்.—

ஆசிரியர் "வக்கீல்"]

**READY! 1956 READY!!**

**ஸ்ரீ வித்யா டைரிகள்**

பப்ளிஷர்ஸ்: ஸ்ரீ வித்யா பப்ளிஷிங் ஹவுஸ், கும்பகோணம்.

சென்ற இதழ் (3) தொடர்ச்சி

# கூட்டுறவுச் சட்டமும் விதிகளும்.

**K. ஸ்ரீநிவாஸன், M. A.**

**(தஞ்சை ஹூட் கூட்டுறவுப் பயிற்சிக் கழக விரிவுரையாளர்.)**

[1932-ஆம் வருடத்திய கூட்டுறவுச் சட்டமும் இவை சம்பந்தமான விதிகளும் "வக்கீல்" 1954-மே இதழ் முதல் தொடர்ச்சியாக விளக்கம் செய்யப்படுகின்றன.]

அட்டாச்மெண்டு (Attachment)

டிமாண்டில் குறித்துள்ள வாய்தாவில் தொகை கொடுக்கப்படாவிட்டால், அட்டாச்சு நோட்டீசு பிறப்பிக்கப்பட்டு சொத்துக்களின் ஏலம் விளம்பரம் செய்யப்படும். (ரூ. 8) அதற்கு அத்தாட்சியாக சொத்துள்ள ஊரில் தண்டூரா போடப்படும். தவிர, இந்தத் தகவல் அவசியமானால் ஜில்லா கெஜட்டிலும் விளம்பரப்படுத்தப்படும்.

வெண்ணிலை டிக்ரிகளை (Simple decrees). நிறைவேற்றும்போது ஸ்தாவர சொத்துக்களை ஏலம் போட வேண்டுமானால் முதலில் ஏலம் போடவேண்டிய ஸ்தாவர சொத்தை அட்டாச்சு செய்ய வேண்டும். (ரூ. 7). அடமான டிக்ரியில் குறித்துள்ள சொத்துக்கள் விஷயத்தில் அவ்வித அட்டாச்சு தேவையில்லை. ரூ. 100க்கு மேற்பட்ட டிக்ரிகளுக்கு அட்டாச்சு தேதிமுதல் முன் பன்னிரண்டு வருடங்களுக்கு ஏலத்திற்குவரும் சொத்து பற்றிய வில்லங்க சர்டிபிகேட்டை வாதி ஒப்புவிக்கவேண்டும்.

ஏலம் (Sale)

ஏலம்பற்றிய விளம்பரம் வாதிக்கு தகவலுக்காக அனுப்பிவைக்கப்படும்.

ஏலதேதி, விளம்பர தேதிக்கு 30 நாட்களுக்கு மேற்பட்டு குறிக்கப்பட்டிருக்கும். பாக்கிதார் ஏலதேதிக்கு முதல் நாள் வரை பணத்தைக் கட்டலாம். ஏலம் பற்றிய தண்டூரா, ஏலம் நடக்கும் ஊரில் முதல் 2 நாட்களிலும் ஏல தினத்தன்றும் போடப்படும். ஏலம் நடக்கும் இடத்தில் ஏல சமயத்தில் தண்டூரா உண்டு.

ஏல சமயத்தில் ஏலம் கோர விரும்புகிறவர்கள் ஏல விளம்பரம், சொத்து பற்றிய வில்லங்க சர்ட்டிபிகேட்டுகளைப் பார்க்க உரிமை உண்டு. ஏலம் எப்பொழுதும் சொத்தின்பேரில் உள்ள முன் வில்லங்கங்களுக்கு உட்பட்டே போடப்படும். வில்லங்கங்களைத் தெரிந்துகொள்வது ஏலம் கோருபவர் கடமை.

ஏலம் பகிரங்கமாக நடத்தப்படும். சாதாரணமாக உயர்ந்த கோரிக்கைதாரருக்கு ஏலம் விடப்படும் என்றாலும், ஏலம் விடும் அதிகாரி அவ்விதமே செய்ய வேண்டுமென்பது கிடையாது. ஏலத்தில் வாதி (சங்க) டிக்ரிதாரரும் கோரலாம். ஏல சொத்தைக் கோரியவர், அவருக்கு ஏலம் விடப்பட்டதாக ஏல அதிகாரி அறிவித்ததும், துகையில் 15 சதம் அட்வான்சாகச் செலுத்தவேண்டும். செலுத்திய ஏலத்தொகைக்கு ஏல அதிகாரி ரசீது தருவார். பாக்கி ஏலத்துகையை அவர் 15 நாட்களுக்குள் கஜானுவில்கட்ட வேண்டும். ஏலதார் வாதியாயிருந்தால் ஏலத் தொகையைச் செலுத்தவேண்டியதில்லை. ஏலதார் பாக்கியை ஏல தேதிமுதல் பதினைந்து நாட்களுக்குள் கட்டத் தவறினால் அவருடைய ஏல டிபாசிட்டு பறிமுதல் செய்யப்பட்டு, ஏலசொத்து முன் ஏலதார் பொறுப்பில் மறு ஏலம் (Resale) போடப்படும். ஏலத்தொகையை கட்டும்பொழுதே ஏலதார் ஏல சர்டிபிகேட்டிற்கான ஸ்டாம்பு மதிப்பையும் செலுத்த வேண்டும்.

நடந்த ஏலம் எந்தெந்த சந்தர்ப்பங்களில் ரத்து செய்யப்படலாம்?

டிக்ரி பாக்கிதார், அல்லது ஏல சொத்தில் பாத்தியம் கொண்டாடும் எவரும் ஏல தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஏலத் தொகையை 5 சதம் லாபம் சேர்த்து செலுத்திவிட்டால் ஏலம் ரிஜிஸ்திராரால் ரத்துசெய்யப்படும். ஏலம் கோரியவருக்கு அவருடைய ஏல டிபாசிட்

5 சதம் லாபத்துடன் வாபீஸ் செய்யப்படும்; அல்லது ஏல விற்பனை ஒழுங்காக நடைபெறவில்லை என்று ஏற்பட்டாலும், ஏலம் ரத்து செய்யப்படும்.

ஏலம் ஒழுங்காக நடத்தப்பட்டு, ஏலத் தொகை நியாயமாயிருந்து டிக்ரிபாக்கிதார் பணமும் கட்டாவிட்டால், ரிஜிஸ்திரார் ஏலத்தை உறுதி செய்து ஏலதாரருக்கு ஏல சொத்துக்கு உரிமையளிக்கும் ஏல சர்ட்டிபிகேட்டைக் கொடுப்பார்.

ஏல சர்ட்டிபிகேட்டைப் பெற்றவர் ஏல சொத்தை சகஜமாக ஸ்வாதீனம் செய்து கொள்ள முடியாவிட்டால், அவர் ஏல சர்ட்டிபிகேட்டை சிவில் கோர்ட்டில் தாக்கல் செய்து சொத்தை ஸ்வாதீனம் செய்துகொள்ள வேண்டும். (ரூல் XXII 7 to *10*)

கடன் பாக்கிக்காக டிக்ரி பாக்கிதாரின் பூரா சொத்துக்களையும் ஜப்தி ஏலம் செய்யலாமா? ஜப்திக்குப்பின் செய்த கிரயம் செல்லுபடியாகுமா?

கடனுக்கு மிக அதிகமான சொத்துக்களை ஏல அதிகாரி ஜப்தி செய்து ஏலம் விடுவது கூடாது. ஜப்தி செய்யப்பட்ட பின்பு ஜப்தியான சொத்தை ஜப்தியை நீக்குவதற்காகவல்லாமல் விற்ருலும் வில்லங்கப்படுத்திளுலும் அது செல்லுபடியாகாது. (ரூல் XXII *13*)

ஜப்தியின்பொழுது செய்யப்படும் சொத்துபற்றிய ஆக்ஷேபணைகளை யார் விசாரித்து முடிவு செய்வார்?

ஜப்தி செய்யப்படும் சொத்துபற்றிய ஆக்ஷேபத்தை அக்கரை உள்ளவர் சேல் ஆபீசரிடம் தெரிவித்துக் கொள்ள வேண்டும். அவர் தமது ஆக்ஷேபத்தை ரூ. 1—8—0 கட்டணத்துடன் கொடுக்க வேண்டும்.

சேல் ஆபீசர் அதே ஸ்தலத்தில் ஆக்ஷேபணையை விசாரித்து முடிவு சொல்வார். நியாயமானல் அவர் அட்டாச்சை விடுதலை செய்யலாம். விசாரணைக்கு நாட்கள் அவசியமானல் அவர் ஏலத்தை ஒத்தி வைப்பார்.

பல டிக்ரிகளுக்காக ஒரு சொத்து ஏலமானல்?

முதலில் நடவடிக்கை எடுத்துள்ள கோர்ட்டில் மற்ற கோர்ட்டுகள் தங்கள் பாத்தியதைகளை தாக்கல் செய்யவேண்டும்.

சம்பந்தப்பட்ட கோர்ட்டுகளில் எந்தக் கோர்ட்டு மேலதிகாரமுள்ளதோ அதன் உத்திரவு, அல்லது முதல் கோர்ட்டு உத்திரவுப்படி ஏலத்தொகை பாக்கிதாரர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும். (ரூல் XXII - *20*)

சங்கம் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய பாக்கிகளுக்கு ஜப்தி ஏலம்

சங்கம் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய பாக்கியை ரிஜிஸ்திரார் செக்ஷன் 57 A ரூல் XXII - படி அமல் செய்து வசூலிப்பார். ஆனல் வாதியும், நிறைவேற்றும் கோர்ட்டும் சர்க்காரே ஆனபடியினல் ரூல் XXIIபடி நிறைவேற்று கட்டணம் கட்டத் தேவையில்லை. வாதிக்கு ரூலில் குறிப்பிடப் பட்டுள்ள நோட்டீசுகள் பிறப்பிக்கத் தேவையில்லை. அவசியமான வில்லங்க சர்டிபிகேட்டை ரிஜிஸ்திரார் தாமே மனுச்செய்து வாங்கிக் கொள்வார். (ரூல். XXII A)

தீர்ப்புக்கு முன் சொத்தை ஜப்திசெய்ய கூட்டுறவுச் சட்டத்தில் முறை எப்படி?

பிரதிவாதி சொத்தைப் பராதீனம் செய்துவிடுவார் என்று வாதி பயப்பட்டால் தீர்ப்புக்கு முன் ஜப்தி (அட்டாச்சு) கோர செக்ஷன் 50 (4) அனுமதிக்கிறது.

வாதியின் கோரிக்கையின் நியாயத்தை ரிஜிஸ்திரார் ஜாக்கிரதையுடன் கவனித்து முடிவு செய்வார். அட்டாச்சு உத்திரவு பிறப்பித்த பின்பு பிரதிவாதி தகுந்த ஜாமீன் கொடுத்தால் ரிஜிஸ்திரார் அந்த ஜப்தியை விடுதலை செய்வார்.

இவ்விதம் அட்டாச்சு செய்யப்பட்ட சொத்தை, தீர்ப்புக்குப்பின் ஏலத்திற்குக் கொண்டு வரும் போது, மறுபடியும் அட்டாச்சு செய்யத் தேவையில்லை. (ரூல் XXIII - 5)

ஒரு கூட்டுறவுச் சங்கம் தனது லாபத்திலிருந்து அங்கத்தினர்களுக்கு போனஸ் (Bonus) வழங்குவது பற்றி

**நாணயச் சங்கங்கள் லாபத்திலிருந்து அங்கத்தினர்களுக்கு போனஸ் வழங்கக் கூடாது. மோட்டார் ஓட்டிகள் கூட்டுறவுச் சங்கம் மட்டும் அங்கத்தினர்களுக்கு லாபத்திலிருந்து 3 மாத சம்பளத்திற்கு அதிகப்படாமல் போனஸ் வழங்கலாம். வியாபார சங்கங்களும், உற்பத்தி சங்கங்களும் அவைகளின் பைலா நிபந்தனைகளின்படி நிகர லாபத்தில் கால் பங்கிற்கு (25%) அதிகப்படாமல் போனஸ் ஆக வினியோகிக்கலாம். இதற்கான தீர்மானத்தை சங்க மகாசபை செய்ய வேண்டும். ஸ்டோர் போன்ற வியாபார சங்கங்கள் மெம்பர்கள் வாங்கிய சாமான்களை அனுசரித்தும், நெசவுபோன்ற உற்பத்தி சங்கங்கள் மெம்பர்கள் உற்பத்தியின் மதிப்பை அனுசரித்தும் போனஸ் வழங்குகின்றன. [ரூல் XXII (c)]**

கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு மகாநாடுகளுக்குப் பணம் கொடுப்பது பற்றி.

**1932 - க்கு முன்பு சங்கங்கள் தங்கள் இஷ்டம்போல் செய்து வந்தன. இப்பொழு ரூல் XXV - படி சங்கங்கள், மகாநாடுகள் கூட்ட பைலாவில் அதிகாரமுள்ள மாகாண யூனியன், பெடரேஷன், ஜில்லா பாங்கி, மத்தியஸ்டோர்போன்ற ஸ்தாபனங்கள் கூட்டும் மகாநாடுகளுக்கு மட்டுமே பணம் கொடுக்கலாம்.**

**மகாநாட்டைக் கூட்டும் சங்கம் மகாநாட்டின் கணக்கைத் தனியாக வைக்க வேண்டும். அந்தக் கணக்கு செக்‌ஷன் 37 - படி ஆடிட் செய்யப்படும்.**

ஒரு கமிட்டி - மெம்பரின் பதவிக் காலம் எப்படி கணக்கிடப்படும்?

**சங்க பைலாவில் கமிட்டியின் பதவிக் காலம் குறிக்கப்பட்டிருக்கும். ஒரே சமயத்தில் தேர்தல் நடத்தும்படி பைலா இருந்தால், எல்லா மெம்பர்கள் பதவியும் ஒரே காலத்தில் முடிவடையும். இடையில் வந்தவர் பதவியும் அதே காலத்தில் முடிவடையும்.**

**பிரதி வருஷமும் ஒரு சிலரின் ஸ்தானங்கள் காலியாகி தேர்தல் நடத்தப் பட வேண்டுமென்றிருந்தால், காலியாக வேண்டிய ஸ்தானங்கள் முதலில் (சீட்டு முறையில்) தீர்மானிக்கப்பட்டு அந்த ஸ்தானங்களுக்கு மட்டும் தேர்தல் நடத்தப் படும், அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் காலம் அந்தத் தேர்தல் முதல் கணக்கிடப்படும்.**

ஒரு சங்கத்தின் கமிட்டி – மெம்பர்கள் தங்கள் பதவிக் காலத்திற்குப் பின்னும் பதவியில் இருக்கலாமா?

**ஒவ்வொரு கமிட்டியும் தனது பதவி காலியாகு முன்பு மகாசபையைக் கூட்டி, புது கமிட்டியைத் தேர ஏற்பாடு செய்ய வேண்டும். புது கமிட்டியைத் தேராவிட்டாலும் தனது வாய்தாகாலம் முடிந்ததும் பழைய கமிட்டி தனது பதவியை இழந்து விடும். அது சங்கத்தின் காரியங்களை மேற்கொண்டு நடத்த முடியாது. நடத்தவும் கூடாது. ஆகவே எதிர்பாராத காரணங்களால் புதுக்கமிட்டியின் தேர்தலை வாய்தாவிற்குள் நடத்த முடியாவிட்டால் பழைய கமிட்டி தகுந்த காரணங்களைக் காட்டி தமது பதவியைச் சிறிது காலம் நீடிக்குமாறு தனது பதவிக்காலம் முடியுமுன்பு ரிஜிஸ்திராரை கோரிக்கொள்ள வேண்டும் (XXVA - 2). பதவிக்காலம் முடிந்த பிற்பாடு மனுவை ஏற்றுக்கொண்டு ரிஜிஸ்திரார் கூட கமிட்டியைப் பதவியில் நீடிக்க முடியாது.**

(தொடரும்)

187741
சென்னை-600 003

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL PRESS, TIRUVADAMARUDUR AND PUBLISED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM FOR THE VAKIL PUBLICATIONS LIMITED, *Editor* V. S. VIJAYARAGAVACHARI, B.A., B.L.




மேனி அழகு மட்டும் இருந்தால் போதாது!
ஆடை அழகும் வேண்டும்!
ஆடை அழகு பெற
—: அறந்தாங்கி :—

# 786 சங்கு சோப்பை




**வாங்கி உபயோகியுங்கள்**
**கட்டி 1-க்கு அணு 0-1-3தான்**

தயாரிப்பவர்:-
இ. கா. ரு. மு. காதர் நயினு முகம்மது,
786 சங்கு சோப் ஒர்க்ஸ், அறந்தாங்கி S. Ry.

# ‘ஜெயராம்’ ஹெர்னியா க்யூர்

**குடல்வாத நிவாரணியை உபயோகியுங்கள். 3-தினத்தில் குணம் தெரியும்.**


| | | | |
|---|---|---|---|
| எலிமெண்டரி கேஸ் | .... | ரூ. | 6-0-0 |
| செகண்டரி கேஸ் | ... | ரூ. | 11-0-0 |
| அட்வான்ஸ் கேஸ் | .... | ரூ. | 25-0-0 |

**உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.**

From: GEORGE SELVARAJ, / To *Dr. Jayaram Avl, Kumbakonam.*
Asst. Edward High School, SATTUR.

மகா-ள-ள-ஸ்ரீ டாக்டர் அவர்களுக்கு நமஸ்காரம்.

தாங்கள் அனுப்பிய ‘காயசுத்தி ஸ்பெஷல்’ லேகியததையும் காயசுத்தி பஸ்பத்தையும் 26—1—49 முதல் சாப்பிட்டு வருகிறேன். தகுந்த பக்குவ முறைப் படியும் பத்திய முறைப்படியும் அதன் பலனுக சிறிது மாறுதல் காணப்பட்டு ஆனந்தம் அடைந்தேன். அதாவது முன்பு காலையில் எழுந்து 10 நிமிஷங்களுக்கெல்லாம் குடல் கீழிரங்கிவிடும் ஆனல் இப்போது நான் சுமார் கால் மைல் தூரம் நடந்து சென்று ஸ்னனம் செய்துவிட்டு வந்தபின்பும் வலியோ குடல் இறக்கமோ இல்லை ஆகாரம் சாப்பிட்டபின்தான் சிறிது இறங்குகிறது இதிலிருந்து நான் கூடிய சீக்கிரம் குணமடைய முடியுமென நம்புகிறேன். தற்போது லேகியம் சுமார் இரண்டு மூன்று நாட்களுக்குத்தான் இருக்கும். பூரண சுகம்பெற இன்னுமொரு டப்பா அவசியமென நினைக்கிறேன். ஆகையால் இந்த லெட்டர் கண்டதும் தயவு செய்து மறுதபாலில் காயசுத்தி ‘ஸ்பெஷல்’ லேகியம் ஒரு டப்பா அவசியம் அனுப்பிவைக்குமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளுகிறேன். காயசுத்தி பஸ்பம் இன்னும் சுமார் 15 நாட்களுக்குப் போதுமான அளவு இருக்கிறது.




சாத்தூர், }
18—2—49. }

இப்படிக்கு தங்கள் நன்றியுள்ள,
ஜார்ஜ் செவராஜ்.

**G. ஜெயராம் வைத்தியசாலை, (Regd)**
**28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, :: கும்பகோணம்.**

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்

REGISTERED TRADE MARK



பிராஞ்சு: (மன்னார்குடி.)

கூந்தலுக்கு வளர்ச்சியும் மூளைக்குக் குளிர்ச்சியும் கொடுப்பதில் நிகரற்ற சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், கோகுல் கூந்தல் தைலம், வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள், பன்னீர், இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

*Sole Agents:*
For Madras
SURAJ AGENCIES.
MADRAS.

*For Coimbatore, Palghat & Nilgiris:*
B. BALAPATTABI CHETTIAR.
249, Vysyal Street.
COIMBATORE.